இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2022. Founded 19 Feb. 1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 146 | இதழ் : 11 | திகதி : 26.06.2022 | விலை : 30.00

# பரவலான ஊழல், தவறான நிர்வாகம் மற்றும் அரசியல் ஸ்திரமின்மைக்குத் தீர்வு

## இலங்கைக் கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் அறிக்கை

இலங்கையில் உள்ள கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் (CBCSL) உறுப்பினர்களாகிய நாங்கள், இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள சோகமான நிலைமை குறித்து எங்களுடைய தீவிர கவலையை வெளிப்படுத்த விரும்புகிறோம். உணவு, எரிபொருள் வீட்டு மற்றும் தொழிற் சாலை எரிவாயு போன்ற அடிப்படைத் தேவைகள் இல்லாமல் மக்கள் சாலைகளில் தவிக்கின்றனர்.

நோயாளிகள் தங்கள் உயிருக்குத் தேவையான மருந்து இல்லாமல் பரிதவிக்கின்றனர். கைக்குழந்தைகள் மற்றும் குழந்தைகளுக்குப் பால் உணவு கிடைக்குமா என பெற்றோர் ஏங்குகின்றனர். நம் தேசத்தைத் தாக்கிய சோகம் நம் காலத்தில் சந்திக்கும் மிக மோசமான நிலையாகும். அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடி மக்களை நியாயமற்ற முறையில் துன்புறுத்துகின்றது. இந்தப் பயங்கரமான பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர்கள் இன்னும் அடையாளப்படுத்தப்பட வேண்டியவர்களாய் உள்ளனர். நாடு ஸ்தம்பித்து, உணவற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இந்தப் பின்னணியில், இடைக்கால அரசு இந்தப் பிரச்சினைகளைத் தீர்த்து, மக்களின் அன்றாடத் துன்பங்களில் இருந்து மக்களை விடுவிக்கவேண்டும் என்று இலங்கைக் கத்தோலிக்க ஆயர்கள் பேரவை வலியுறுத்துகிறது. வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ள மக்களுக்கு அடிப்படை உணவுப் பொருட்களை வழங்க நிவாரணப் ☛ 02


## காவலூர் புனித அந்தோனியார் கல்லூரியின் யூபிலி ஆண்டு



ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரியின் 150ஆவது யூபிலி ஆண்டின் அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த 14ஆம் திகதி கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

கல்லூரி அதிபர் அருட்திரு அன்ரன் அமலதாஸ் அடிகளின் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை கலந்து சிறப்பித்ததுடன் யூபிலி நிகழ்வை அங்குரார்ப்பணம் செய்துவைத்தார்.

## அருட்பணி கலாநிதி அன்ரன் மத்தாயஸ் அடிகளார் காலமானார்




யாழ். மறைமாவட்ட அருட்பணியாளர் அருட்திரு. கலாநிதி அன்ரன் மத்தாயஸ் அடிகள் கடந்த 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார். இவர் யாழ்ப்பாணம் மன்னார் மறைமாவட்டங்களில் பல அளப்பரிய பணிகளைக் கடந்த 49 ஆண்டுகள் ஆற்றியுள்ளார்.

யாழ். மறைமாவட்டத்தில் சிறிய குருமட அதிபராகவும், யாழ். கத்தோலிக்க அச்சகத்தின் முகாமையாளராகவும், பாதுகாவலன் பத்திரிகையின் ஆசிரியராகவும் பின்னர் யாழ் பல்கலைக்கழகத்தில் கிறிஸ்தவ நாகரிகத்துறையின் தலைவராகவும் முதுநிலை விரிவுரையாளராகவும் நல்லூர் ஆசீர்வாதப்பர் ஆலயம், கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலயம், கோப்பாய் மரியன்னை ஆலயம் ஆகியவற்றின் பங்குத்தந்தையாகவும் பெரும்பணியாற்றினார்.

அருட்தந்தையின் பணிவாழ்வுக்காக இறைவனுக்கு நன்றி கூறி இவரின் ஆன்மா இறைவனில் அமைதிபெற மன்றாடுவோம்.

## புனரமைக்கப்பட்ட காவலூர் புனித அந்தோனியார் ஆலயப் பங்குப்பணிமனைத் திறப்பு விழா



ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் ஆலயப் பங்குப் பணிமனை அழகிய தோற்றத்துடன் புனரமைக்கப்பட்டு மீள் திறப்பு விழா கடந்த 11ம் திகதி (11.06.2022) சனிக்கிழமை இடம்பெற்றது.

யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையும் , ஓய்வு நிலை ஆயர் பேரருட்கலாநிதி தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகையும் புனித அந்தோனியார் கல்லூரி முன்றலில் மாலை அணிவித்து புனித மரியாள் மகளிர் வித்தியாலய மாணவிகளின் நடனத்தோடு சிறப்பாக வரவேற்கப்பட்டனர்.

புனித அந்தோனியார் ஆலயப் பங்குப் பணிமனை யாழ் ஆயரால் ஆசீர்வதிக்கப்பட்டு, ஓய்வு நிலை ஆயரால் திறந்து வைக்கப்பட்டது. ☛ 02

## பண்டத்தரிப்பில் திருக்குடும்பக் கன்னியருக்காகப் புதிய மடம்



இளவாலை மறைக்கோட்டத்தில் பண்டத்தரிப்பில் அமைந்துள்ள திருக்குடும்பக் கன்னியர் துறவற சபையினருக்கான நிரந்தர இல்லம் அமைக்கப்பட்டுத் திறந்து வைக்கும் நிகழ்வு கடந்த 12ஆம் திகதி நடைபெற்றது.

புதிதாக அமைக்கப்பட்ட இக்கட்டடத்தை யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு. கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை ஆசீர்வதித்துத் திறந்து வைத்தார். இந் நிகழ்வில் குருக்கள், துறவிகள் பங்கு மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்

## ஆயர் தலைமையில் தூய ஆவியானவர் பெருவிழா



யாழ். மறைமாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட தூய ஆவியார் திருவிழிப்பு ஆராதனை கடந்த 04 ஆம் திகதி புனித மடுத்தீனார் சிறிய குருமட மைதானத்தில் நடைபெற்றது. மாலை 6.30 மணிக்குத் திருச்செபமாலையுடன் ஆரம்பமான திருவிழிப்பு ஆராதனையில் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் திரு விழிப்புத் திருப்பலி இடம்பெற்றது.

திருவிழிப்பு ஆராதனைகளின் தொடர்ச்சியாக அதிகாலை 3.30 மணிக்கு நற்கருணை ஆராதனையும் தொடர்ந்து மறைமாவட்டக் குருமுதல்வர் தலைமையில் தூய ஆவியார் பெருவிழாத் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது. இத்திருவிழிப்பு ஆராதனையில் யாழ். மறைமாவட்டத்தின் பல்வேறு இடங்களிலிருந்தும் ஆயிரத்திற்கும் அதிக மானவர்கள் இணைந்து செபித்தார்கள்.

# எமது எண்ணம்

## இந்திய உதவிகளும் இனவாதப் பேச்சுக்களும்

தற்போது ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடிகளுக்கு உதவி வழங்க இந்தியாவைத் தவிர வேறெந்த ஒரு நாடுகளும் உதவியளிக்கத் தயாராக இல்லையென அரசாங்கம் கூறியுள்ள நிலையில்,தொடர்ந்தும் உதவியளிக்க இந்தியா முன்வந்துள்ளது.

இலங்கையின் பொருளாதார நெருக்கடி தொடர்பாக ஆராய் வதற்கு கொழும்புக்கு வருகைதந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் வினய் குவாட்ரா உள்ளிட்ட தூது குழுவி னர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரைச் சந்தித்து உரையாடியுள்ளனர்.

இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் வினய் குவாட்ரா, இந்திய பிரதான பொருளாதார ஆலோசகர் வீ.ஆனந்த் நாகேஸ்வரன் மற்றும் இந்திய பொருளாதார அலுவல்கள் திணைக்களத்தின் செயலாளர் உள்ளிட்ட தூதுக்குழுவினர் இவ்வாரம் கொழும்பை வந்தடைந்தனர்.

ஜனாதிபதி. பிரதமர் ஆகியோரைத் தனித்தனியாகச் சந்தித்த இந்திய உயர்மட்டக் குழுவினர், இலங்கைக்குத் தொடர்ந்து உதவியளிப்பது குறித்து விரிவாக உரையாடியதாக இலங்கை நிதியமைச்சுத் தெரிவித்துள்ளது.

இச் சந்திப்பில் கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் உள்ளிட்ட இராஜதந்திரிகளும் பங்குபற்றியிருந்தனர். இதுவரை நான்கு பில்லியன் கடன்களை இந்தியா வழங்கியுள்ளது.

இந்தியக் கடன் வசதியின் கீழ் எரிபொருட்கள். மருந்துப் பொருட்கள் இலங்கைக்கு வழங்கப்பட்டன. ஆனால் அடுத்த கட்ட உதவிக்கான ஒப்பந்தங்கள் இதுவரை செய்யப்படவில்லை. உதவிகளுக்குரிய ஒப்பந்தங்களைச் செய்வது குறித்து இந்திய உயர்மட்டத் தூதுக்குழுவினர் விரிவாகப் பேச்சு நடத்தியுள்ளனர்.

ஆனால் பேசப்பட்ட விடயங்கள் எதுவும் ஊடகங்களுக்குத் தெரிவிக்கப்படவில்லை. இருந்தாலும் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய ரணில் விக்கிரமசிங்க இதுவரை 31 ஆயிரம் கோடி ரூபாய்கள் அளவுக்கு இந்தியாவிடம் இருந்து கடன்கள் பெறப்பட்டுள்ளன. இக் கடன் மீளச் செலுத்தப்பட வேண்டியவை என்று கூறினார்.

பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவியளிக்க வேண்டுமெனப் பிரதமர் சிந்தித்துவரும் நிலை யில் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சிலர் இனவாதப் பேச்சுக்களைக் கைவிடும் நிலையில் இல்லை என்பதும் தெரிகின்றது.

பௌத்த சிங்களவர்கள் இலங்கையின் எந்த இடத்தில் வேண்டுமானாலும் குடியேறுவார்களென்று முன்னாள் இராணுவ உயர் அதிகாரியும்,முன்னாள் அமைச்சருமான சரத் வீரசேகர நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

முல்லைத்தீவு குருந்தூர் மலையில் பௌத்த சின்னங்கள் இருந்ததாலேயே அங்கு புத்த விகாரை அமைக்கப்படுவதாகவும்,ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் சிலர் குண்டர்களைப் பயன்படுத்தி அதனைத் தடுப்பதாகவும் கூறினார்.

தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு எச்சரிக்கைவிடுக்கும் தொனியில் கடந்த வாரம் உரை நிகழ்த்திய சரத் வீரசேகர, 21 ஆவது திருத்தச் சட்டத்திற்கு ஆதரவு வழங்க முடியாதென்றார்.

ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்பதனால். மாகாண ஆளுநர்களின் அதிகாரங்களும் குறைவடைந்து விடும் என்றும், இதனால் மாகாணங்கள் தனித்து இயங்கக் கூடிய சமஸ்டி ஆட்சி முறையை உருவாக்கும் ஆபத்து நேரிடலாமெனவும் சரத் வீரசேகர நாடாளுமன்றத்தில் கூறினார்.

இதன் காரணமாகவே 21 ஆவதுதிருத்தச் சட்டத்திற்கு ஆதரவாக வாக்களிக்க முடியாதென்று சரத் வீரசேகர தெரிவித்தார்.

ஆகவே இவ்வாறான இனவாதப் பேச்சுக்கள் தவிர்க்கப்பட வேண்டும். இதற்குப் பதலளித்த தமிழ்த் தேசியக் கட்சிகளின் உறுப்பினர்கள் சரியான விளக்கத்தைக் கொடுத்திருக்கின்றனர். அதாவது பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் இனவாதம் பேசிமக்களைக் குழப்பவேண்டாம் என்ற தொனியில் பதிலளித்திருக்கின்றனர். பொருளாதார நெருக்கடியில் வாழும் எம் மக்களுக்கு அரசியல் ரீதியான மாற்றமே நிரந்தரத் தீர்வைத் தரும் என்பதே காலத்தின் செய்தியாகும்.

அருட்பணி.எஸ்.எயின்சிலி றொஷான்

## முழங்காவிலில் உறுதிப்பூசுதல் திருச்சடங்கு



வைகாசி மாதம் 8ம் திகதி முழங்காவில் பங்கின் எல்லா ஆலயங்களையும் சேர்ந்த 218 பிள்ளைகளுக்கு உறுதிப்பூசுதல் அருட்சாதனம் யாழ். மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிர காசம் ஆண்டகை அவர்களால் திருப்பலியில் வழங்கப்பட்டது. இத் திருச்சடங்கின் ஒழுங்குகளை பங்குத்தந்தை ம. பத்திநாதர் அடிகளார் ஒழுங்கு செய்திருந்தார்

## புனரமைக்கப்பட்டகாவலூர்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இப்பங்குப் பணிமனையானது 110 ஆண்டுகள் பழமை வாய்ந்ததாகும். கால ஓட்டத்திலும் போரின் தாக்கத்திலும் சிதைவுண்டிருந்த இப் பணிமனை இந்நிலைக்கு வந்துள்ளது யாவருக்கும் மகிழ்ச்சிக்குரியது. எம் முன்னை நாள் பங்குத்தந்தையர்கள் அருட்பணி P.F.இராஜ சிங்கம், அருட்பணி. A. மைக்மயூரன், மற்றும் தற்போதைய பங்குத் தந்தை அருட்பணி S.J.Q.ஜெயறஞ்சன் ஆகியோரின் வழிநடத்தலில் உள்நாட்டு வெளிநாட்டு மக்களின் தியாகப் பங்களிப்பில் அழகிய தோற்றத்துடன் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. இந்நிகழ்வை ஆவ ணப்படுத்தும் வகையில் நூல் வெளியீடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பரவலான ஊழல், தவறான நிர்வாகம் .....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பொதிகள் வழங்கப்படவேண்டும். அத்தியாவசியப் பொருட்களின் கட்டுப்பாடற்ற விலை உயர்வு, தட்டுப்பாடு மற்றும் பதுக்கல் ஆகியவை தெருக்களில் நீண்ட வரிசையில் நிற்கவேண்டிய கட்டாயத்தில் உள்ள மக்களின் அன்றாடவாழ்க்கையைக்கடுமையாகபாதிக்கின் றன. மறை மாவட்டங்கள் மற்றும் திருஅவை மூலம் இது தொடர்பாகச் செயற்படும் வலையை மைப்பைக் கொண்ட திருஅவையின் சமூக நடவடிக்கைப் பிரிவான கரித்தாஸ் மூலம் இந்தச் செயற்பாட்டில் உதவ இலங்கைக் கத்தோலிக்க ஆயர்கள் பேரவை முன்வந்துள்ளது.

ஆயினும் கூட இவ்வாறு நிவார ணங்களை வழங்கி வாழும் நிலையில் தொடர்ந்து நாம் வாழமுடியாது. முதலில் உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். இதற்கு வேளாணதுறைக்கு உரத்தில் கணிசமான மானியம் வழங்க வேண்டும். தேவையான மருந்துகளை ஏனைய நட்பு நாடுகளின் உதவி யுடன் வழங்க வேண்டும். நாளாந்த நிலைமை யைக் கண்காணித்து விரைவான தீர்வுகளைக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் தீர்மானித்த ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட பொறிமுறையையும் திட்டத்தையும் நாம் காணவில்லை. அரசியல் சச்சரவுகளில் ஈடுபடுவதற்குப் பதிலாக நாட்டின் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். குறிப்பாக இனம், மதம் மற்றும் கட்சி அரசியல் அடிப்படையில் மக்கள் மத்தியில் வெறுப்புணர்வை ஏற்படுத்தக்கூடாது. அமைப்பு மாற்றத்தின் அவசியத்தை நிவர்த்தி செய்ய வழிவகுத்த குறிப்பாக இளைஞர் குடிமக்க ளின் தவறாத எதிர்ப்புகள் மற்றும் ஆர்ப்பாட்டங் கள் அங்கீகரிக்கப்படவேண்டும். அமைப்பின் தோல்வி, ஒட்டுமொத்த மக்களையும் ஒரு அடிப் படைமாற்றத்திற்காகக்கூச்சலிடக்கட்டாயப்படுத்தி யுள்ளது. வன்முறையில் இருந்து விலகுமாறு சம்பந்தப்பட்ட அனைவரையும் நாங்கள் அழைக்கிறோம்.

மேலும் அரசியலமைப்பின் மூலம் உறுதியளிக்கப்பட்டுள்ள சட்டரீதியான கருத்துச் சுதந்திரம் மற்றும் நியாயமான மக்களின் உரிமைகளை அரசாங்கம் மதிக்கவேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

பொருளாதார நெருக்கடியின் முக் கிய காரணங்கள் வெற்றிகரமான அரசாங்கங் கள் மற்றும் அரசியல் ஸ்திரமின்மையின் பரவ லான ஊழல் மற்றும் முழுமையான தவ றான நிர்வாகமாகும். ஊழலும் ஊழலுக்கான வழிகளும் வெளிப்படையாகத் தோன்றியுள்ளது. இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவை நிர்வகிக் கும் சட்டங்கள் மேலும் பலப்படுத்தப்பட வேண் டும். அரசு கணக்கு ஆய்வு செய்யும் முறையை செயற்படுத்துவதாகத் தெரியவில்லை.

இவை அனைத்தும் பொருளா- தாரக் கொள்கைகளிலும் அரசியலமைப்பிலும் தேவையான மாற்றங்களைக் கொண்டுவர வேண்டியதன் அவசியத்தைக் காட்டுகின் றன. 20ஆவது திருத்தச் சட்டத்தைப் பாராளு மன்றத்தில் நிறைவேற்றுவதற்கு எமது தலை வர்கள் அனுமதித்துள்ளமை மிகவும் துர திஷ்டவசமானது. அத்தகைய அரசியலமைப்பு மாற்றம் ஒரு சட்டமன்ற அடிப்படையிலான அரசாங்கத்திற்கு வழிவகுக்கும் என்று நாங் கள் நம்புகிறோம். நீதித்துறையின் முழுமை யான சுதந்திரம் அரசியலமைப்பில் வலு வாகப் பதியப்படவேண்டும். மற்ற அனைத்து ஆணைக்குழுக்களும் முற்றிலும் சுதந்திர மானதாகவும், நாடாளுமன்றத்தின் வழிகாட்டு தலுக்கு மட்டுமே உட்பட்டதாகவும் இருக்க வேண்டும். இதன் மூலம் நாட்டில் உண்மை யான ஜனநாயகத்தை மீண்டும் நிலைநாட்ட முடியும். இப்பிரச்சினைகளை விரைவாகக் கையாள்வதன் மூலம்தான், எங்கள் தாய் நாட்டில் உள்ள ஆன்மீகத் தலைவர்களின் வழிகாட்டுதலுடன் விவசாய சுயவாழ்வு, ஏற்று மதி சார்ந்த பொருளாதாரம், வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் சுற்றுலா போன்ற நீண்ட காலத் தீர்வுகளுக்கான நம்பிக்கையுடன் நாடு முன்னேற முடியும்.

இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற் கும்,நீதி, சமத்துவத்தை நிலைநாட்டுவதற்கும், நமது குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் கண்ணியத்துடன் வாழ்வதற்கான வழியைத் திறப்பதற்கும் அரசாங்கம் கடுமையான நட வடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று நாங் கள் உறுதியாக வேண்டுகின்றோம். தற் போதைய நெருக்கடியைச் சமாளிக்க எங்க ளுக்குத் தாராள மனதுடன் உதவும் அனைத்து உள்ளூர் மற்றும் வெளிநாட்டு உபகாரிகளுக்கு நன்றிகளைத் தெரிவிக்கும் அதே வேளையில், இறைவன் அவர்களை ஆசீர்வதிக்கவும் நாங் கள் இறைவனை மன்றாடுகின்றோம். நம் நாட்டை இறைவன் ஆசீர்வதிப்பாராக.

## நன்றி நவிலல்



எம் சகோதரர் அருட்பணி அன்ரன் மத்தாயஸ் அடிகள் யாழ். மறை மாவட்டக் குருவாகக் கடந்த 49 ஆண்டுகள் நிறைவான பணியாற்றியுள்ளார். அவர் கடந்த மூன்று ஆண்டுகள் நோய்வாய்ப்பட்டிருந்து 10.06.2022 அன்று இறைபதமடைந்தார்.

எம் சகோதரர் அருட்பணி அன்ரன் மத்தாயஸ் அடிகள் நோய்வாய்ப்பட்ட காலத்தில் அவரை அன்போடு பராமரித்ததுடன், அவரின் மறைவின் பின் அவரது நல்லடக்க ஆராதனைகளை சிறப்பாக நடாத்திய யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை, மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, யாழ். குருமுதல்வர், சகோதர குருக்கள், துறவிகள், பாங்கு மக்கள், உற்றார், உறவினர், நண்பர்கள், அவர் பணி செய்த இடங்களில் இருந்து வந்து அஞ்சலி செலுத்தி செபித்த இறைமக்கள், மற்றும் அவர் நோயுற்ற காலங்களில் சிறப்பாகப் பராமரித்த தெல்லிப்பளை அரசி னர் மருத்துவமனை வைத்தியர்கள், தாதியர்கள், உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் மரணச்சடங்கில் மலர்வளையங்கள் வைத்தும், இரங்கல் பதாதைகள் வெளியிட்டும், இரங்கற் செய்திகள் அனுப்பியும் அஞ்சலி செலுத்திய அனைவருக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றிகளைக் கூறி நிற்கின்றோம்.

அருட்பணி மத்தாயஸ் அடிகளாரின் சகோதர சகோதரிகள்

# காவலன் கலசம்

**உலகில் முதல் தமிழ் புனிதராக பரிசுத்த திருத்தந்தை அவர்களால் இவ்வருடம் (2022) புனிதர் பட்டம் வழங்கப்பெற்ற புனித தேவசகாயம்பிள்ளை தமிழ் நாட்டைச் சேரந்தவராக இற்றைக்கு மூன்று நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்தவராக இருந்தாலும் தமிழகத்தை விட ஈழத்தில் அதிகம் அறிமுகமானவர். காரணம் யாழ்ப்பாணத் தென்மோடிக் கூத்துமரபிலே மிகவும் பிரபல்யம் பெற்ற கூத்தாக அராலி முத்துக்குமாரப் புலவர் எழுதிய 'தேவசகாயம்பிள்ளை' கூத்து விளங்கியது. எனவே தேவசகாயம் பிள்ளையின் வரலாற்றினையும் கூத்தின் மூலமாக அவர் இங்கு அறிமுகமாகியமையையும் இக்கட்டுரை எடுத்துரைகின்றது.**

# ஈழத்தில் புனித தேவசகாயம்பிள்ளையை அறிமுகம் செய்த நாட்டுக்கூத்து

காவலூர் யோவான்



## புனித தேவசகாயம் பிள்ளையின் வரலாற்றுச் சுருக்கம்

இந்தியாவிலே விதாங்கூர் அரசிற்குக் கீழ் இருந்த மருதங்குளம் கரை என்னும் ஊரில் நாயர் என அழைக்கப் பெற்ற பிராமண வகுப்பைச் சேர்ந்த திருநீலகண்டன் 1712 ஆம் ஆண்டு பிறந்தார். சிறிய வயதில் இருந்தே கல்வியிலும், கலைகளிலும், போர்ப் பயிற்சிகளிலும் சிறந்து விளங்கியவர். தமிழ், வடமொழி, மலையாளம் ஆகிய மொழிகளை அறிந்தவராக இருந்தார். அவர் செல்வந்தராக இருந்த காரணத்தினால் பல காணி பூமிகளையும், சொத்துக்ளையும் கொண்டவராக வாழ்ந்தார். அவருக்குக் கீழே வேலை பார்ப்பதற்குப் பல ஊழியர்கள் இருந்தனர். இவர் இளைஞன் ஆனதும் மேக்கோடு என்ற ஊரில் உள்ள பெரிய நாயர் குடும்பத்தில் பார்கவியம்மா என்ற பெண்ணை மணம் செய்து, பத்திரகாளியம்மனைக் குலதெய்வமாகக் கொண்டு வாழ்ந்தார். அதேவேளை அக்காலத்தில் அப்பிரதேசத்தினை மார்த்தாண்ட வர்மா மன்னனாக ஆட்சி செய்து வந்தான். அவனுடைய ஆட்சியின் கீழ் பத்மநாதபுரத்திலுள்ள நீலகண்ட கோவில் நிர்வாகியாகவும் அங்குள்ள கோட்டை, அரண்மனை போன்றவற்றைக் கட்டுகின்ற தொழிலாளர்களின் மேற்பார்வையாளனாகவும் அரச பதவி வகித்தார். 1741 இல் டச்சுக்காரருக்கும் மார்த்தாண்ட வர்மாவுக்கும் நடந்த போரில் கைதியான பெல்ஜிய நாட்டைச் சேர்ந்த யுஸ்தேசியுஸ் பெனடிக்ற்ருள் டிலனாய் என்பவன் பின்னர் மன்னனுக்கு விசுவாசமாகி அவரது ஏவலனாகப் பணியாற்றினான். அவன் ஒரு கத்தோலிக்கன். அவனுடன் நீலகண்டனுக்கு நட்பு ஏற்பட்டது.

அக்காலத்தில் நீலகண்டனின் குடும்பம் பேரழிவுகளைச் சந்தித்தது அவரது சொத்துக்கள் அழிந்தன, சூறையாடப்பட்டன. அதனால் மிகவும் மனமுடைந்த நீலகண்டனை பெனடிக்ற் தேற்றி விவிலியத்திலுள்ள யோபுவின் வரலாற்றினைக் கூறி அவரை ஆறுதல் படுத்தினார். அதனால் கத்தோலிக்க மதத்திலே ஈர்ப்புக் கொண்ட அவர், நண்பனின் தூண்டுதலுடன் தென்பாண்டி நாட்டிலுள்ள வடக்கன்குளம் புனித திருக்குடும்ப ஆலயத்துக்குச் சென்று பரஞ்சோதிநாதர் என்ற பங்குத் தந்தையிடம் தனது ஆவலைக் கூறி 1745 இல் திருமுழுக்குப் பெற்றார். அவருக்கு லாசர் என்னும் பெயர் இடப்பட்டது. (லாசர் என்ற பெயரின் தமிழ் வடிவமே தேவசகாயம் ஆகும்) அவர் 18 மைல்களுக்கு அப்பாலுள்ள தேவாலயத்திற்கு நடந்து சென்று வழிபாடு செய்யும் அளவுக்கு கிறிஸ்தவ மதத்திலே ஆழமான பற்றுக்கொண்டார். பின்னர் தனது மனைவியையும் மனம்மாற்றி அவருக்கும் திருமுழுக்கு அளித்து திரேசியா (ஞானப்பூ) என்ற பெயரை இட்டார்.

அவரது மனமாற்றம் பிராமண சமூகத்திலே மாபெரும் பூகம்பத்தினை ஏற்படுத்தியது. அக்காலத்தில் கிறிஸ்தவர்கள் இழிந்த சாதியினராகக் கொள்ளப்பட்டனர். அவர்கள் உயர் வகுப்பினராக இருந்தாலும் கிறிஸ்தவர்களானால் அவர்கள் இழிகுலத்தவராக கருதப்பட்டனர். இதனால் அவர் தனது சமூகத்தினால் வெறுத்து ஒதுக்கப்பட்டார். அவர் மதம் மாறிய செய்தி மன்னனுக்கும் அறிவிக்கப்பட்டது. அவர் மேல்கொண்ட ஆத்திரத்தினால் பல்வேறு பழிகளை அவர் மேல் சுமத்தினார்கள். கோபங்கொண்ட மன்னன் அவரை அழைப்பித்து புத்திமதிகள் கூறினார். அதனை அவர் ஏற்காத காரணத்தினால் அவரைச் சிறையிலே அடைத்துச் சித்திரவதை செய்யுமாறு பணித்தான். பசி பட்டினி, அடி உதைகளுக்கு உள்ளாகியும் அவர் வேதத்தை மறுதலிக்கவில்லை. கோபங்கொண்டமன்னன் அவருக்குக் கரும்புள்ளி, செம்புள்ளி குத்தி எருமை மாட்டில் ஏற்றி ஊரூராக அவமானச் சின்னமாக இழுத்துச்சென்று அவமானப்படுத்தினான். பட்டவேப்பமரம் ஒன்றில் உணவு, தண்ணீர் இன்றி சங்கிலிகளால் பிணைத்து கட்டினான். அவர் மனம் மாறாமல் உறுதியாக இருந்தார். தன்னை விடுகின்ற இடத்தில் சத்திய வேதத்தினைப் போதித்தார். அவமானச் சின்னமாக கருதப்பட்டவர் இறைவனால் மகிமைப்படுத்தப்பட்டார். அவரால் பல புதுமைகள் நிகழ்ந்தன. பட்ட வேப்பமரம் தளிர்த்தது. அவரது விலங்குகளைத் தொட்டவர்கள் குணமடைந்தனர்.

இதனை அறிந்த மன்னன் கடும் கோபமுற்று அவருக்கு மேலும் சித்திரவதைகளை அனுமதித்தான். மாறி மாறிப் பல அதிகாரிகளிடம் அனுப்பப்பட்டு பல்வேறு சித்திரவதைகளுக்கு ஆளானார். 1749 இல் கைது செய்யப்பட்டவர் ஏறத்தாழ மூன்று வருடங்கள் சிறையிலும், வீதிகளிலும், எரியும் சூளைகளிலும் சித்திரவதைபட்டார். இறுதியில் மன்னன் கொல்லும்படி கட்டளை இட்டான். அவரை காற்றாடிமலை என அழைக்கப்பெற்ற ஆரல்வாய்மொழி மலையில் கைகள் கட்டப்பட்டு, துப்பாக்கியினால் சுடப்பட்டு 1752 தை மாதம் 14 ஆம் திகதி கொல்லப்பட்டார். அவரது உடலை மலையடிவாரம் சென்ற வியாபாரிகள் கண்டெடுத்து கோட்டாற்றில் உள்ள புனித சவேரியார் ஆலயப் பங்குத் தந்தையிடம் கையளித்தனர்.

அவ்வாலயத்திலேயே அவர் அடக்கம் செய்யப்பட்டார். அவரது மனைவியும் வடக்கன் குளத்திலுள்ள மடம் ஒன்றிலே அடைக்கலம் புகுந்து தூய வாழ்வு வாழ்ந்து இறந்தார். தேவசகாயம் இறந்ததன் பின்னர் பல அருஞ்செயல்கள் நடந்தன. அவரது கல்லறையைத் தரிசிக்கும் மக்கள் கூட்டம் அதிகரித்தது.

## புனிதர் பட்டத்துக்கான ஆயத்தங்கள்

1756 ஆம் ஆண்டு கொச்சி மறை மாவட்ட ஆயர் கிளமென்சயோசே கோலாசோ லயித்தாவோ திருத்தந்தை 14 ஆம் பெனடிக்ருக்கு அவரின் வேத சாட்சிய மரணம் பற்றிய அறிக்கையை அனுப்பினார். 1786 ஆம் ஆண்டளவில் சீரோ மலபார் பேராயர் யோசப் மார் கரியாற்றல் அவர்கள் திருத்தந்தை 6ஆம் பத்திநாதரைச் சந்தித்து மறைசாட்சிக்கு புனிதர் பட்டம் வழங்க விண்ணப்பித்தார். நூற்றாண்டுகள் கடந்து நடந்த முயற்சிகளின் பெறுபேறாக 2012 இல் அவருக்கு முத்திப்பேறுபட்டம் வழங்கப்பட்டது. 2022 இல் பரிசுத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களினால் உரோமாபுரியில் புனிதர் பட்டம் அளிக்கப்பட்டது.

## ஈழத்தில் அறிமுகம்

புனித தேவசகாயம்பிள்ளை அவர்களைப் பற்றி புனிதர் பட்டத்திற்குப் பின்னரே பலரும் அறிகின்றனர். ஆனால் ஈழத்துக் கத்தோலிக்க மதத்தவர்கள் மத்தியில் குறிப்பாக யாழ்ப்பாணக் கிறிஸ்தவர்கள் மத்தியில் தேவசகாயம்பிள்ளை இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னமே அறிமுகமாகியுள்ளார்.

எவ்வாறு அறிமுகமானார் என்பது பற்றி ஆழமான தகவல்கள் கிடைக்கப்பெறவில்லை. தேவசகாயம்பிள்ளை வாசகப்பா, தேவசகாயம்பிள்ளை அம்மானை போன்ற இலக்கியங்கள் தமிழகத்தில் எழுதப்பட்டுள்ளன. ஆனால் 1827 க்கு முன்னர் யாழ்ப்பாணத் தென் மோடி நாட்டுக்கூத்து மரபிலே அராலி முத்துக் குமாரு புலவரால் கூத்தாகப் பாடப்பெற்று, யாழ்ப்பாணத்தின் பட்டி தொட்டி எங்கும் ஆயிரத்திற்கும் அதிகமான தடவைகள் தேவசகாயம் பிள்ளை கூத்து மேடையேற்றப்பட்டன.

இறுதியாக 2019ஆம் ஆண்டு அமரர் அண்ணாவியார் பேக்மன் ஜெயராஜா அவர்களின் நெறியாள்கையில் திருமறைக் கலாமன்றத்தினால் மேடையேற்றப்பட்டது. எமது முன்னோர்கள் 'தேவசகாயம்' 'ஞானப்பூ' போன்ற பெயர்களைத் தமது பிள்ளைகளுக்கு இக்கூத்தினைப் பார்த்தே வைத்துள்ளனர். ஒரு காலத்தவர்கள் எல்லாருக்கும் தேவசகாயம்பிள்ளை கதை நன்றாகத் தெரிந்திருந்தது.

இந்நாட்டுக்கூத்தே தேவசகாயம் பிள்ளையை ஈழத்தில் அறிமுகம் செய்தது. அக்காலத்தில் கிறிஸ்தவ மறையை அறிமுகம் செய்ய வந்த குருமார் ஈழத்தில் வழக்கில் இருந்த பல்வேறு இலக்கியங்களையும் கூத்து மரபினையும் பயன்படுத்தி, தமது மதப் பிரசாரங்களை மேற்கொண்டனர். தமிழ் அறிந்த புலவர்கள் மூலமாகப் புனிதர்கள் வேத சாட்சிகளின் வரலாற்றினை இலக்கியங்களாகவும், நாடகங்களாகவும் படைத்து பாமர மக்கள் மத்தியில் மறையை அறிமுகப்படுத்தினார்கள். அத்தகைய முயற்சிகளின் பயனாகவே ஈழத்தில் பல கத்தோலிக்க கூத்துக்கள் எழுதப்பட்டன. அதன் தொடர்ச்சியாகவே தேவசகாயம் பிள்ளையும் எழுந்தது.

## தேவசகாயம்பிள்ளை நாட்டுக் கூத்து

தேவசகாயம் பிள்ளை நாட்டுக் கூத்தினை எழுதியவர். அராலி முத்துக்குமார புலவர். அவர் ஒரு இந்து சமயத்தவர். கேட்டதும் பாட்டெழுதும் ஆற்றல் மிக்கவராக வரகவியாக இருந்தவர். இந்துவாக இருந்தும் கிறிஸ்தவ கதையாகிய தேவசகாயம்பிள்ளையை மிகவும் சிறப்புப் பொருந்தியதாக திருமறையின் நோக்கிற்கு எந்தவகையிலும் குறைவின்றி ஆக்கி இருக்கின்றார்.

அராலியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் அனலைதீவிலே திருமணம் முடித்தவர். ஊர்காவற்றுறையிலே ஒரு பாடசாலையை உருவாக்கி அதன் தலைமை ஆசிரியராக இருந்தார் எனக் கூறப்படுகின்றது. அவர் ஊர்காவற்றுறையிலே இருந்தபோதுதான் 1827க்கு முன் இக்கூத்தினை எழுதி இருக்க வேண்டும் எனக் கருதப்படுகின்றது. காரணம் நாரந்தனை அண்ணாவியார் சவினை சந்தியாப்பிள்ளை அவர்களே முதன் முதலாக இதனை நெறிப்படுத்தி நாரந்தனையிலே மேடையேற்றினார் எனக் கூறப்படுகின்றது. எனவே அவர் இதனை எழுதுவதற்கு அண்ணாவியார் சந்தியாப்பிள்ளை அவர்களோ அல்லது வேறு குருவானவர்கள் யாரோ இதற்குக் காரணமாக இருந்திருக்கலாம். அவைபற்றி அறிய முடியவில்லை. ஆனால் அமரர் பூந்தான் யோசேப்பு அவர்களாலும் பல பிரபல்யம் மிக்க அண்ணாவிமார்களாலும் இக்கூத்து பல தடவைகள் மேடையேற்றப்பட்டது. 1926 ஆம் ஆண்டு முதன் முதலாக அச்சுவேலி ஞானப்பிரகாச அச்சியந்திர சாலையில் சுவாமி ஞானப்பிரகாசரின் வளரப்புத் தந்தையார் புலவர் ச.தம்பி முத்துவினால் அச்சேற்றப்பட்ட போது 'இம்பிறி மாட்டூர்' என்னும் திருஅவை அனுமதி பெறப்பட்டே நூல் பதிப்புச் செய்யப் பட்டுள்ளது. இதற்கு முன்னரோ பின்னரோ தேவசகாயம்பிள்ளை அம்மானையும், தேவசகாயம்பிள்ளைசபாநாடகமும்புலவர் தம்பி முத்துப்பிள்ளை அவர்களினால் பதிப்புச் செய்யப்பட்டுள்ளன. ஆனால் அவை எவற்றையும் தற்போது காண முடியவில்லை. இதனைப் பல தடவைகள் மேடையேற்றிய அண்ணாவியார்பூந்தான் யோசேப்பு அவர்களின் வேண்டுகோளின் பயனாக ஆசிரியர் மு.வி ஆசீர்வாதம் அவர்கள் 1974 இல் இந்நூலைத் தமது ஆசீர்வாத அச்சகத்தினால் இரண்டாம் பதிப்பாக வெளிட்டுள்ளார்.

## தேவசகாயம்பிள்ளை கூத்தின் சிறப்பு

யாழ்ப்பாணத் தென்மோடிக் கூத்து மரபிலே தேவசகாயம் பிள்ளை கூத்துத் தான் 'தாய்க்கூத்து' என அழைக்கப் பெறுகின்றது. இந்தக் கூத்தில் உள்ள பாடல் மெட்டுக்களின் பெயரிலேயே பிற்பட்ட காலக் கூத்துக்கள் எழுதப்பெற்றன. தேவசகாயம்பிள்ளை கூத்தினை நெறிப்படுத்த வல்லவரே உண்மையான அண்ணாவியார் என இனங்காணப்பட்டார். காரணம் செழுமையான மரபுக் கவிதைச் சிறப்புடனும் இராக தாளச் சிறப்புடனும் இக்கூத்து காணப்படுட்டுள்ளது.

"கத்தோலிக்கர் அல்லாத ஒருவர் கத்தோலிக்க சமயக் கருத்துக்களையும் வரலாற்றினையும் மிகவும் பொருத்தமாகவும் உண்மைக்குப் பிறழ்வு செல்லாமலும் மிக லாவகமாகப் பாடியுள்ளதை ஒரு அசாதாரண திறமை என்று கூற வேண்டும்" என திரு மு.வி.ஆசீர்வாதம் அவர்கள் இரண்டாம் பதிப்பின் முன்னுரையில் குறிப்பிடுகின்றார்.

(தொடரும்...)

# காவலன் கலசம்


## சமாதானமே ஒரே வழி

பாப்பரசர் தினமாகிய 26 ஆனி 2022 அன்று அதன் நினைவாக பாப்பிறை மறை பரப்பு சபைகளின் தேசிய இயக்குனர் அட்பணி பசிஸ் றொகான் பெர்னான்டோ அடிகள் விடுத்த செய்தி.

அமைதிக்கான பயணம் ஒருவரின் இதயத்திலிருந்து ஆரம்பிக்கின்றது. அமைதி என்பது சந்தையில் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரு பொருளல்ல, ஆகவே அதற்கான பெறுமதியை அளவிடவோ விலை மதிப்பிடவோ முடியாது. 2ம் வத்திக்கான் சங்க சுற்றுமடலில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. “ஒருவர் அமைதியைப் பற்றிப் பேசுவாராயின் அது அவரது இதயத்தில் ஆழமாக வேரூன்றி இருக்கவேண்டும்.” ஒருவரது வாழ்க்கை நிலையில் மக்களின் பழக்கவழக்கங்களும் செயற்பாடுகளும் அதன் சமூக பொருளாதார அரசியலாலும், சமூக நிலைப்பாட்டாலும் உருவாக்கப்படுகின்றது. இயேசுக் கிறிஸ்து உண்மையாகவே கூறினார். அமைதிக்காக உழைப்பவர்கள் ஆறுதலடைவர். இறைவனின் மக்கள் எனப்படுபவர்.” (மத் 5 : 9)

வகை வளம் பெருகுவதற்கான இன்றைய சமுதாயப் பின்னணியில் எமது நாட்டிலும் கூட, பொருளாதார சமூக அரசியல் செயற்பாடுகளில் பின்னடைவு இருப்பது வெளிப்படையானது. ஒரு முழுமையான அபிவிருத்திக்காக, ஒரு புதிய பெயரால் அறிமுகம் செய்து, அமைதிக்கான பாதையில் அர்த்தத்திற்கு விளக்கமளிக்க திருத்தந்தை ஆறாம் சின்னப்பர் முனைப்புடன் செயற்பட்டார். நிரந்தர அமைதியைப் பெற்றுக் கொள்வதற்கான மூன்று வழிகள் பின்வருமாறு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. முதற்படியாக, பொது செயற்திட்டங்களை அடையும் ஒருவழியாக சந்ததிகளுக்கிடையில் உரையாடல், இரண்டாவதாக சுதந்திரத்தினதும் பொறுப்புணர்வினதும் அபிவிருத்தியின் ஒரு காரணியாகக் கல்வி, மூன்றாவதாக, முழுமையான மனித மகத்துவத்தை அடையும் ஒருவழியாக உடல் உழைப்பு, “மரபு வழி சமூகத்தை உருவாக்க” இந்த மூன்று முக்கிய கொள்கைகளும் தவிர்க்க முடியாதவை. இவையல்லாத எந்த ஒரு செயற்திட்டமும் அமைதி அடைவதற்கு போது மானதாயிராது.

“சமுதாயப் பாதுகாப்பின்றி அமைதி இருக்கமுடியாது” என்று திருத்தந்தை பிரான்சிஸ் கூறுகின்றார். இது முற்றிலும் உண்மை. இன்று சமுதாயத்தில் காலடி வைத்தால், மனித வாழ்வின் வேகத்தின் மத்தியில், தொழில் நுட்பம் உலகத்தை அதிர்வுற முயற்சிக்கும் காலத்தை, மக்கள் சந்திக்க நேரிடும் என்பது உண்மை. இது மனுக்குலத்தை மிதமிஞ்சிப் பாதிப்பதன் விளைவாக, மக்கள் விலங்கினங்களாக நடந்து கொள்கின்றார்கள். “ஒவ்வொரு காலத்திலும் அமைதி மேலிருந்து வழங்கப்பட்ட ஒருகொடை, அது கையளித்தலினதும் பகிர்தலினதும் காரணியாகும். ”எல்லா இடத்திலும் அதிகம் மனிதம் நிறைந்த உலக உருவாக்க ஒவ்வொருவரும் ஐக்கியமாக ஒன்றிணைந்து வாழவேண்டும். ஒவ்வொருவரும் ஒரு புதியமன உறுதியோடு அமைதியை விருத்திசெய்ய முயற்சிக்க வேண்டும். தெய்வீக படைப்பாளரால் சமூகத்தில் முத்திரை குத்தப்பட்ட, முழுமையான நல்லொழுக்கத்தின் மட்டிலும் நீதியின் மட்டிலும் தாகம் கொண்ட, மக்களின் செயற்பாடுகளால் ஐக்கியத்தோடு அமைதி உதயமாகும்.




ஆகவே நீதியிலும் பார்க்க அன்பின் விளைவே அமைதி.

சமரசம் இறைவனிடமிருந்து வெளிப்படுகின்றது. அமைதியின் பாதையைத் தவிர வேறு எந்த வழியும் கத்தோலிக்கர்களுக்கு இருக்க முடியாது. இதற்காகவே இயேசுக்கிறிஸ்துவில் ஒருடலாக நாம் ஒன்று கூடவேண்டும். காலத்தின் தேவைகளுக்கேற்ப அமைதிக்கான வழி எது? சரியான பாதையில் செல்ல நேரம் வந்து விட்டது. அமைதி தான் ஒரே வழி. அமைதியை அடைவதற்கு முக்கியமாக எமது நாட்டில் எல்லாத் தலைவர்களினதும் ஊழியர்களினதும் ஒத்துழைப்பு முக்கியம்.

மக்கள் தங்களது ஆன்மீகத்தையும் சக்தியையும் மனமுவந்துபகழரவேண்டும். மற்றைய மனித நிலைகளினதும் இறையாண்மையையும் மதிக்க வேண்டும்.

### திருத்தந்தை தினம் 26.06.2022

சகோதரத்துவம் வெளிப்படக்கூடிய வழிகளில் வாழ வேண்டும். அன்பிலிருந்து வெளிப்படும் அமைதி இயேசுக்கிறிஸ்துவின் ஒரு அடையாளம்.

சிலுவை மூலம் இயேசுக்கிறிஸ்து இறைவனுக்கும் மனிதனுக்குமிடையே ஒப்புரவை ஏற்படுத்தினார். உண்மையில் கத்தோலிக்கர்கள் அமைதியைச் செயற்படுத்த விரும்பின்,அமைதிக்காகக் காத்திருப்போருடன் இணைந்து செபத்தில் ஈடுபடவேண்டும்.

அத்தகைய கத்தோலிக்கர்கள் தமது உரிமைகளைப் பாதுகாக்க, வலியுறுத்திக் கேட்கப்படும் செயற்பாடுகளில் ஈடுபடக்கூடாது. அத்தகையதிரு அவையே உலகத்திற்கு இன்றுதேவைஐக்கியத்தினதும் அமைதி யினதும் அபிவிருத்திக்காக நியமிக்கப்பட்ட பணிமுறைக் குழுவின் சுற்றுமடலில் அமைதியின் அபிவிருத்திக்கான செயற்பாடுகள் முதன்மைப்படுத்திக் கூறப்பட்டுள்ளன.

“அமைதி நீதியின் ஒரு துணிகர முயற்சி. முழுமையான நல்லொழுக்கத்திற்கும் நீதிக்கும் தாகம் கொண்டவர்களின் வாழக்கை முறையிலிருந்தும் அமைதி உதயமாகிறது.”

“சமாதானமே ஒரே வழி” உண்மையில் ஐக்கியத்தில் நாம் ஒன்றிணைவோம். உண்மையான சமய ஒருமைப்பாட்டுடன் அமைதிக்கான பாதைகளை அமைப்போம். விரைவில் புதிய வாழ்க்கைப் பயணத்தினுள் அடி எடுத்து வைப்போம்.

## ‘திருமறை முத்துக்கள்’

அருட்பணி. தே. யூட்தாஸ்

### நம்பிக்கை அறிக்கையின் பத்தாம் பிரிவு

**139.பாவம் என்றால் என்ன?**

பாவம் என்றால் எமது எண்ணங்கள், வார்த்தைகள், செயற்பாடுகள் அல்லது இறைவனின் கட்டளைக்கு எதிராக செய்யத் தவறிய விடயங்களூடாக இறைவனுக்கெதிராகச் செயற்படுதல் ஆகும்.

**140.பாவங்களின் இருபெரும் பிரிவுகளும் எவை?**

பாவங்களின் இருபெரும் பிரிவுகளாவன ஜென்ம பாவம் (பிறப்புரிமைப் பாவம்), கன்ம பாவம்.

**141.ஜென்ம பாவம் (பிறப்புரிமைப் பாவம்) என்றால் என்ன?**

ஜென்ம பாவம் (பிறப்புரிமைப் பாவம்) என்றால் மனுக்குலத்தின் தலைவனும் முதல் மனிதனுமாகிய ஆதாமின் பாவதோசம் வழியாக ஏனைய மனிதர்களுக்குக் கடத்தப்படும் நிலை ஜென்ம பாவம் என அழைக்கப்படுகிறது.

**142.ஆதாம் செய்த பாவம் என்ன?**

விலக்கப்பட்ட மரத்தின் கனியை உண்டு இறைவனுக்குக் கீழ்ப்படியாமையே ஆதாம் செய்த பாவமாகும்.

**143.ஜென்ம பாவத்தால் (பிறப்புரிமைப் பாவம்) மனுக்குலம் முழுவதும் கறைபட்டுக் குற்றமிழைத்ததா?**

ஜென்ம பாவ தோசமில்லாது பிறந்த புனித தேவ-மாதாவும் அவருடைய இறைமகனும் தவிர்ந்த ஏனைய மனுக்குலத்தின் உறுப்பினர் அனைவரும் ஜென்ம பாவத்தால் கறைபட்டனர்.

**144.அன்னை மரியா பெற்றுக்கொண்ட இச்சிறப்பு எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

அன்னை மரியாவினுடைய இச் சிறப்பு அமல உற்பவம் என அழைக்கப்படுகிறது.

**145.கன்ம பாவம் என்றால் என்ன?**

நாம் ஒவ்வொருவரும் கட்டிக்கொள்கின்ற பாவங்கள் கன்ம பாவம் எனப்படுகிறது.

**146.கன்ம பாவத்தின் பிரிவுகள் எவை?**

கன்ம பாவத்தின் பிரிவுகளாவன: சாவான பாவம், அற்ப பாவம்.

**147.சாவான பாவம் என்றால் என்ன?**

இறைவனுக்கெதிரான பாரதூரமான குற்றம் சாவான பாவம் என அழைக்கப்படுகிறது.

**148.ஏன் இது சாவான பாவம் என அழைக்கப்படுகிறது?**

இது சாவான பாவமென அழைக்கப்படுவதன் காரணம் இப் பாவமானது மிகவும் பாரதூரமாகி ஒருவருடைய ஆன்மாவை அழித்து நரகத்திற்குத் தள்ளுகிறது.

**149.சாவான பாவம் எவ்வாறு நிகழ்கிறது?**

ஒரு பாவச் செயலில் பின்வரும் மூன்று விடயங்களும் உள்ளடக்கப்படுமாயின் அப்பாவச் செயல் சாவான பாவமாகிறது:

பூரண சம்மதம், முழு அறிவு, கனமான காரியம்.

*(தொடரும்...)*

## தமிழ்க் கிறிஸ்தவத்தின் இறை அனுபவ வளர்ச்சி

நான் குருவாகி ஓர் இறையியலாளராக
உருவெடுத்ததன் பின்பு, பெரும்பாலும்
ஆசிய நாடுகளின் அடிப்படையிலும்,
எங்களது சொந்தத் தமிழ் சூழலிலும், எனது இறையியல்
சிந்தனைகளை உருவாக்கியிருக்கின்றேன்.
அவற்றை இங்கே தருகின்றேன்.

*- அருட்பணி எஸ்.ஜே.இம்மானுவேல்*

**13**

### அத்தியாயம் 8



**தமிழ் வழிபாடுகளில் பண்பாட்டு மயமாக்குதலை ஆர்வத்துடன் நடத்தினால் மட்டும் போதாது.**

**8.1** (தொடர்ச்சி...)

அதன் காரணமாகத் தமிழ்த் திருஅவைகள் தங்களுடைய வழிபாடுகள் கொண்டாட்டங்களில், திருவிழாக்களில், தமிழில் இறை வார்த்தையையும், தமிழ் சங்கீதம், அடையாளங்களுடனும் ஆர்வத் துடனும் செய்தனர்.

இருந்தும் 2 ஆம் வத்திக்கான் சங்கத்திற்குப் பின்பு, பண்பாட்டு மயமாக்குதல் எவ்விதமாக, எவ்வளவிற்கு எமது மற்றைய முக்கிய பணிகளைப் பின்தள்ளி விட்டன என்ற வினாவை எழுப்புவது எமது சீர்திருத்த முயற்சிக்கு முக்கியம். எவ்வளவிற்கு எம்முடைய சூழலில் தமிழ்த் திருஅவைகளை ஓர் உண்மையான கிறிஸ்துவின் ஒளியாக அல்லது உப்பாக மக்களின் மத்தியிலே செயற்படுன்கின்றதைப் பின்தள்ளி விட்டன.

**8.2 பண்பாட்டு மயமாக்குதலின் போர்வையில் நடந்ததென்ன?**

2ஆம் வத்திக்கான் சங்கத்திற்குப் பின்பு, நாங்கள் எடுத்த முயற்சிகள் எல்லாவற்றையும் இன்றைய தேவைகளின் பார்வையில் நியாயப்படுத்த முடியாமல் இருக்கின்றது.

தமிழ் மொழியிலேயும், வழிபாட்டு முறைகளிலேயும் நடந்த மாற்றங்களை மேலே வரவேற்றோம். ஆனால் கிறிஸ்தவத்திற்கென்று, அதன் தனித்துவ நற்செய்தி அடிப்படையிலும், அது ஓர் உலக மறையாக வளர்ந் வந்த நிகழ்வுகளையும், மறைக்கவோ மறுக்கவோ முடியாது.

பெரும்பான்மையான சைவமதத் தமிழர்களின் ஆலயங்களுக்கும் கிறிஸ்தவ ஆலயங்களுக்கும் இடையிலுள்ள வேற்றுமையை மேலே 4.5, 4.6ல் விளக்கியிருந்தேன். கிறிஸ்தவ ஆலயங்கள் இறைவனால் கிறிஸ்து வழியாக வெளிப்படுத்தியவைகளை, விவிலிய வார்த்தையில் கேட்டு விளக்கத்துடன் உள்வாங்கவும், பாஸ்கா மறைபொருளை உரிய வணக்கத்துடன், குருவும் மக்களும் கூட்டாகக் கொண்டாடிப் பகிர்வதற்காகவுமே அமைக்கப்படுகின்றது.

ஆலயங்களுக்குள்ளேயே நடக்கும் சடங்குகளை, செபங்கள் பாடல்களை நன்றாகத் தமிழ் மொழியிலேயும், விசேடசமாக பக்கவாத்தியங்களுடனும் வளமூட்டி செய்கின்றோம். பக்க வாத்தி யங்களின் பகுதியையும், வரவேற்பு, நன்றி கூறும் சடங்குகளையும் மிகைப் படுத்தலாகாது. சயிக்கினைகளைத் தமிழ் முறைப்படி மாற்றியிருக்கின்றோம். மாலை போட்டு, பொன்னாடை போர்த்து, பொட்டிட்டுஇ நடன வரவேற்புடன் அழகாகச் செய்கின்றோம். ஆனால் இவைகள் அதிக நேரத்தையும் கவனத்தையும் ஈர்த்து, கிறிஸ்தவத்தின் மையப்பொருளான இறைவார்த்தையின் முக்கியத்துவத்தையும் திருப்பலியின் முக்கியத்துவத்தையும் சற்றுப் பின்தள்ளி இருக்கின்றது.

சுருங்கக் கூறினால் - வழிபாட்டின் பொருளையும் பங்குபற்று வோரின் நலனையும் பிரதானமாகக் கருதி நடத்தப்படும் வழிபாட்டிற்கு பொறுப்பாக தலைமை வகிப்பது குருவே! உதவியாளர்கள் ஒவ்வொருவரும் தன்னிச்சையாக தனது பாகத்தை மாத்திரம் மிகைப்படுத்துவது தவறு. (தொடரும்...)

## காவலன் கலசம்

# வரலாற்றில் ஒரு தலைவர்



## யாழ். மறைமாவட்ட முதல் சுதேச ஆயர் ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி.

**யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட (மன்னார், அனுராதபுரம் மாவட்டங்களை உள்ளடக்கியிருந்த அக்கால)த் திருஅவையின் முதல் சுதேச ஆயரான ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி.யின்(1901 - 1972) மறைவின் 50 வருடங்களை நெருங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் (17 யூலை 2022) எமது இளையோர் சமூகமும் எதிர்கால சமூகமும் இவரது வாழ்வும் பணியும் பற்றி அறிய வேண்டும் என்பதற்காக விசேடமாகத் தனியார் பாடசாலைக் கல்வியே நல்லொழுக்கத்திற்கு அடிப்படை என்னும் இவரது கொள்கைப்பிடிப்புடனான வாழ்வும் பணியும் ஆறு தலைப்புகளின் கீழ் தொடர்கட்டுரையாகத் தரப்படுகின்றது.**

**(சென்ற இதழின் தொடர்ச்சி..)**

**2. மறை வாழ்வில் சீர்திருத்தங்கள்**

உயர் சமூகத்தினர் மத்தியில் மட்டு மல்ல தாழ்த்தப்பட்டவர்கள் மத்தியிலும் சமூக வேறுபாடு காட்டும் மனப்பான் மையை இன்று வரை காணலாம். குடும்ப, திருமுழுக்கு, திருமணப் பதிவேடுகளில் சமூகப்பெயர்கள் குறிக்கப்படுவதை இவர் தனது பணியின் தொடக்கத்தில் இருந்தே படிப்படியாக இல்லாமற் செய்தார்.

சமூக வேறுபாட்டில் ஆலயத்திரு விழாதிருவழிபாட்டு ஆண்டுச் சக்கரத்தின் படி திருவழிபாட்டு ஆண்டு காலங்களுக் கேற்ப மூவொரு இறைவன், மரியன்னை, புனிதர்களின் விழாக்கள் கொண்டாடப்பட் டாலும் ஆலயத்திருவிழா மட்டுமே மிக வும் ஆடம்பரமாகவும், உணர்வுபூர்வமாக வும் கொண்டாடப்பட்டது. ஏனையவற்றின் முக்கியத்துவம் உணரப்படாமை, அவற் றில் மக்கள் மயப்படுத்தப்பட்ட செயற்பாடு கள் குறைந்திருந்தமை, அனைத்து ஆலயங்களிலும் பொதுவாகக் கொண்டாடப் பட்டதால் ஒரு குறிப்பிட்ட ஆலயத்தினர் தமது தனித்துவத்தை வெளிப்படுத்த முடி யாதிருந்தமை,ஏனைய விழாக்களின் அறிவார்ந்த மற்றும் உணர்வு பூர்வமான விளக்கம் போதாமை போன்ற காரணங்க ளால் அவை மக்களின் கவனத்தை ஈர்க்கவில்லை. எனவே ஆலயப்புனித ரின் விழா கொடியேற்றத்துடன் ஆரம்ப மாகிக் குடும்பங்களின் தொகை மற்றும் பண பலத்திற்கேற்ப மூன்று, ஆறு, ஒன் பது, பன்னிரண்டு போன்ற எண்ணிக்கை யிலமைந்த ஆயத்த நவநாட்களுடன் இடம்பெறும். வெளியூர்களில் பல்வேறு காரணங்களுக்காகச் சென்று தங்கியிருக் கும் கிராம மக்களும் இவ்வருடாந்த விழா விற்கு வந்து தமது சொந்த (இரத்த) மற் றும் பந்த (திருமண) உறவுகளைப் புதுப் பித்துக் கொண்டாடி மகிழ்வர். ஆயத்த நாட்கள் சமூக வேறுபாட்டின் அடிப்படை யிலோ அல்லது கூட்டுக்குடும்ப உறவின் அடிப்படையிலோ கொண்டாடப்பட்டது. இதனால் ஒவ்வொரு ஆயத்த நாளின தும் போட்டி அடிப்படையிலமைந்த அலங் காரங்கள், தனிப்பட்டவர்களின் பணபலத் தால் அழைக்கப்படும் அருட்பணியாளர் களின் எண்ணிக்கை, காஸ் விளக்கு கள் அல்லது மின் விளக்குகள், வாண வேடிக்கைகள், மேளமடிப்பது அனைத் தும் இறுதிநாள் திருவிழா வரைக்கும் கூடிக்கொண்டே செல்வதாகவும், போட்டி யோடு பொறாமைக்கும் பல வேளைக- ளில் கலவரம் கொலைக்கும் காரணமாகி காவல் நிலையங்கள், நீதிமன்றங்கள் வரைக்கும் செல்வதாகவும் அமைந்தன. இவர் மேலே கூறப்பட்டவற்றைப் படிப்படி யாக நிறுத்துவதற்காக, அர்த்தத்துடன் அவற்றை ஒன்பது நாட்களாக்கித் (திப.1:14) திருவிழாவுடன் சேர்த்துப் பத்து நாட்களுக்கு அதிகம் இல்லாதபடி கொண் டாட வேண்டுமென்று பணித்தார். பரம் பரைக் குடும்பங்களின் அல்லது சமூகக் குழுமங்களின் நவதினங்களாக அல் லாது அவை பொதுவாகக் கொண்டாடப் பட வேண்டும் என்று அறிவுறுத்தினார். உரிமையுள்ளோரின் செயற்பாடுகள் கத்தோலிக்க நம்பிக்கையின்படி ஆலயத் திருவிழாக்களில் முக்கியமாக முழுத் திருப்பலியில் பங்கு கொண்டு, நல்ல பாவ அறிக்கை ஏற்கெனவே செய்திருந்தவர் கள், தகுதியுடன் நற்கருணை உட் கொள்வதோடு, நற்கருணையே கத் தோலிக்க வாழ்வின் மையம் என் பதைக் கத்தோலிக்கரல்லாதோருக்கு வெளிப்படுத்த நற்கருணை ஆராதனை யில் பங்குபற்றுவதும் நற்கருணைப் பவனி நடத்துவதும் திருவழிபாட்டின் பிரதான செயற்பாடுகளாகும். ஆனால் அருட்பணி யாளர்களின் திட்டமிடலில் இடம்பெறும் இவற்றை விடத் திருவழிபாடுகளுக்கப் பால் தாங்கள் திட்டமிட்டுச் செய்யக் கூடிய பக்தி முயற்சிகளே பெரும்பாலானவர்கள் மத்தியில் முதலிடம் பெற்றன.

புனிதரின் திருச் சொரூபப்பவனி, வாண வேடிக்கை,மேளதாளங்களுடன் கவிகள், விருத்தங்கள் பாடுவது, விருந்து கொடுப்பது, நாடகங்களை மேடையேற்று வது போன்றவை இன்றியமையாதவை யாக நிகழ்த்தப்பட்டன. இவற்றில் ஏதா வது குறைந்தால் கிராமத்திற்கு ஏதாவது தண்டனை கிடைக்குமோ என்று பயந்தனர்.

இவை மக்களுடைய மகிழ்ச்சி, பக்தியின் வெளிப்பாடாக அளவோடு இடம் பெறாமல் ஊர்ச்சண்டை, சமூகச் சண்டை களுக்குக் காரணமாகப் பல ஆண்டுகளா கக் கறைபடிந்த வரலாற்றையே கத் தோலிக்க சமூகத்திற்குக் கொடுத்தன. இப் பக்திச் செயற்பாடுகளை முன்னின்று நிகழ்த்தும் பொதுநிலையினர் பலர், திருப் பலிக்கும் நற்கருணை ஆராதனைக்கும் வராமல், வீட்டிலே இருந்து விட்டுப் புனித ரின் கூடு சுற்றுவதற்காக அந்த நேரத் தில் மட்டும் மதுபோதையில் வருவதும், அளவுக்கு மிஞ்சிய அலங்காரங்கள், மேடை நாடகங்கள் காரணமாக தேவை யற்ற பணச் செலவுகளும் போட்டி பொறாமை களும் பல இடையூறுகளை ஏற்படுத்தின. இவரது முயற்சிகாரணமாகச்சில இடங் களில் இவை சீர்திருத்தம் பெற்றாலும் இவரது சொல்லை மீறிச் செயற்பட்ட பல இடங்களில் இவை இன்னும் தொடர் வதைக் காணலாம்.

**அருட்பணி சி.ஜே.அன்ரனி பாலா**

உரிமையற்றோரின் கடமைகள் சொரூபப்பவனியில் மேளமடித்தல், நிலத்துணி விரித்தல், பந்தல் அமைத் தல், விருந்து சமைத்தல் போன்ற செயற் பாடுகளுக்குத் தமக்குக் கீழே வேலை செய்யும் சிறையின் மக்களின் பல்வேறு பிரிவினரை வைத்துத் திருவிழாக்களை உயர் சமூகத்தினர் நடாத்தினர். தற் போதும் இவை தொடர்ந்ததை, நான் பங்குத்தந்தையாக இருந்த பல இடங் களில் கண்டேன். 2001ஆம் ஆண்டில் நான் பணிசெய்த பங்கிற்கு,அருகிலிருந்த கல்லூரியில் இருந்து மாற்றம் பெற்ற அருட்பணியாளர் திருப்பலி ஒப்புக் கொடுக்க வந்த போது, துணிச்சலவை செய்பவர் மூலம் நிலத்துணி விரித்து வரவேற்றதையும், 2005இல் நான் பணி செய்த பங்கில் கொடி மரமும் கொடியும் மேளக்காரர் மூலம் மேள ஒலி எழுப்பச் செய்து, ஏற்றப்பட்டதையும் என் சொந்தக் கண்களால் கண்டு காதுகளால் கேட் டேன். தாழ்த்தப்பட்டோரின் இச்செயற்பாடு களை நில, கடல், ஆதிக்க உயர் சமூ கத்தினரே செய்தாலென்ன? என்னும் இவரது கேள்வியுடன் இவ்விடயங்கள் படிப்படியாகப் பல இடங்களில் இல்லா தொழித்தன.

(தொடரும்...)

# இறைவா! என்னை மாற்றியருளும்!

"எல்லா மனிதர்களுக்கும் மீட்பராம் கடவுளின் அருள் வெளிப் பட்டுள்ளது" (தீத்து 2:11) என்று புனித பவுல் கிறிஸ்துவின் உலகளாவிய நற்செய்தியினை உறுதிப்படுத் துகின்றார். கடவுள் நம்மோடு இருக்கின்றார் என்ற மறை பொருள் கிறிஸ்து இயேசுவில் முழுமையாக வெளிப்படுத்தப் பட்டது

திடீரென்று ஆண்டவரின் தூதர் அவர்கள் முன் வந்துநின்றபோது ஆண்டவரின் மாட்சி அவர்களைச் சுற்றி ஒளிர்ந்தது (லூக்கா 2:9). "குழந்தையைத் துணிகளில் சுற் றித் தீவனத் தொட்டியில் கிடத்தியிருப்பதைக் காண்பீர்கள். இதுவே உங்களுக்கு அடையாளம்" (லூக்கா 2:11) என்ற வானதூதரின் கூற்று இயேசுவின் புரட்சிகரமான பிறப்பின் உட்பொருளை வெளிக்காட்டி நிற்கின்றது.

நான் என்னை மாற்றவேண்டும் எனில் எங்கி ருந்து ஆரம்பிப்பது? உலகில் பலர் வெளியரங்க மாற்றத் திலேயே கவனம் செலுத்துகின்றார்கள். வெளியரங்க மாற்றத்தைவிட உள்ளரங்க மாற்றம் மிகவும் கடினமா னது. எனினும் உள்ளரங்க மாற்றத்தைத் தோற்று விப்பதுதான் அவசியமானது.

"இந்த உலகத்தின் போக்கின்படி ஒழுகாதீர்கள். மாறாக உங்கள் உள்ளம் புதுப்பிக்கப்பெற்று மாற்றம் அடை வதாக! அப்போது கடவுளின் திருவுளம் எது எனத் தேர்ந்து தெளிவீர்கள். எது நல்லது, எது உகந்தது, எது நிறைவா- னது என்றும் உங்களுக்குத் தெளிவாகத் தெரியும்" (உரோ. 12:2) என்று புனித பவுல் உரோமையருக்கு எழுதிய திருமுகத்தில் குறிப்பிடுகின்றார்.

அறிவு மட்டும் எம்மை இரட்சிக்காது. அறிவு மட்டும் எம்மை மாற்றாது. வருத்தம் இன்றித் திருத்தம் இல்லை. வருத்தத்தை அனுபவித்தே திருத்தத்தை எதிர் கொள்ளலாம். மனங்கள் புதுப்பிக்கப்படும்பொழுது மறு மாற்றம் அடைவது சாத்தியமாகின்றது. இது எப்படிநிகழ் கின்றது?

**1. உள்ளக ரீதியாக நான் மாற்றம் அடையவேண்டும்.**

ஒரு மயிர்கொட்டி வண்ணாத்திப் பூச்சியாக மாறும் அடைவதுபோல நானும் என்னில் ஒருங்கி



அருட்பணி வின்சன் பற்றிக் அ.ம.தி

ணைந்து உள்ளக மாற்றத்தை தோற்றுவிக்க வேண் டும். "இயேசு பேதுருவையும் யாக்கோபையும் யோவா னையும் அழைத்து, ஓர் உயர்ந்த மலைக்கு அவர்களை மட்டும் தனிமையாகக் கூட்டிக் கொண்டுபோனார். அங்கே அவர்கள்முன் அவர் தோற்றம் மாறினார். அவருடைய ஆடைகள் இவ்வுலகில் எந்தச் சலவைக் காரரும் வெளுக்க முடியாத அளவுக்கு வெள்ளை வெளே ரென ஒளி வீசின" (மாற்கு 9:2-3). இயேசு இயேசுவா கவே மறு மாற்றத்தின்பொழுது காணப்பட்டார்.இயேசு தனது மனித நிலையை, அடிப்படை இயல்பை இழந்துவிடாமல் அவர் கடவுளாயும் மனிதனாயும் இருந்தார் என்ற நிலை பாட்டை உறுதிப்படுத்தினார்.

"என் அன்பார்ந்தவர்களே, இப்போது நாம் கடவு ளின் பிள்ளைகளாய் இருக்கிறோம். அவர் தோன்றும் பொழுது நாமும் அவரைப்போல இருப்போம். ஏனெனில் அவர் இருப்பதுபோல் அவரைக் காண்போம்" (1யோவான் 3:2).

"தம்மால் முன்னே தேர்ந்துகொள்ளப்பட்டவர்கள் தம் மகனின் சாயலுக்கு ஏற்றவாறு இருக்க வேண்டும் எனக் கட வுள் முன்குறித்து வைத்தார்" (உரோ.8:29) என்று புனித பவுல் மீட்பின் திட்டத்தைத் தெளிவுபடுத்தினார். நான் நிறைவு பெற்ற முடிவுப்பொருள் அல்ல. மாறாகத் தொடர்ந்து மாற்றத் திற்கு, உருவாக்கத்திற்கு உள்ளாக்கப்பட்டுவரும் இயேசுவின் உடனுழைப்பாளி. இந்த இலக்குநோக்கிய பயணத்தை நிறைவாக்க இறைவன் என்னில் செயற்படுகின்றார்.

எனது பலவீனங்களில் கவனம் செலுத்தினால் நம்பிக்கையை இழந்து விடுவேன். இறைவனின் பிரமாணிக் கமான தன்மையில் கவனம் செலுத்தினால் நம்பிக்கை யின் நட்சத்திரமாய் பிரகாசிப்பேன். கடவுள் தாம் தொடங்கிய அலுவல்களை முடிப்பதற்கு ஆற்றலோடும் ஆர்வத்தோடும் உள்ளேனா? நான் ஒத்துழைப்பு நல்கத்தயார் நிலையில் உள்ளேனா?

**2. எனது மனத்தை மீள் ஒழுங்கு செய்யவேண்டும்.**

நானே எனது வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருக்கும் நிலையை மாற்றியமைக்க எனது ஆசையும் ஒழுங்குபடுத்தலும் ஒருங்கிணையவேண்டும். எனது மனம் இயேசுவின் மனப்பான்மையோடு இசைவுறும் பொழுது நான் இயேசுவின் பிரதிபலிப்பாக உருமாற்றம் அடைகின்றேன்.

எனது ஆற்றல்களுக்கு, எனது வாழ்வியல் மதிப் பீடுகளுக்கு மீள் வடிவம் கொடுக்க வேண்டும். 'எனக்குள் இருக்கும் இயேசு, இயேசுக்குள் இருக்கும் நான்' என்ற ரீதி யில் எனக்கும் இயேசுவுக்கும் இடையேயுள்ள பரஸ்பர உறவு பலப்படுத்தப்படவேண்டும்.

# காவலன் கலசம்



# என் கேள்விக்கென்ன பதில்!

**கேள்விகளைக் கேளுங்கள், பதில்களைப் பாருங்கள்!**

**அருட்பணி செ. அன்புராசா**

(அன்ரன், யாழ்ப்பாணம்)

**கே: இலங்கையில் ஏற்படப்போகும் பட்டினிச் சாவைத் தவிர்க்க நமது நாட்டுத் தலைவர்கள் ஏதாவது முயற்சி செய்வார்களா? வேறு நாடுகள் உதவிக்கு வருமா? உங்கள் ஊகமென்ன?**

பதில்: அன்ரன், முடக்குவாதமுற்றவன் முடங்கிக் கிடப்பது போலத்தான் நமது நாட்டுத் தலைவர்கள் முடங்கிப்போய்க் கிடக்கின்றார்கள். அவர்களால் ஒன்றுமே செய்யமுடியாது. மேலும், வேறு நாடுகளும் பெரிய அளவில் இனிமேல் உதவிக்கு வரமாட்டா! காரணம், மக்களுக்காகக் கொடுப்பதையும் நமது தலைவர்கள் சுருட்டியெடுத்துக் கொள்வார்கள் என்று அவர்களுக்கு நன்கு தெரியும்! எனவே அன்ரன், எவரையும் நம்பி எப்பயனும் இல்லை என்பதுதான் எனது ஊகம்! ஆகவே, 'நம் கைதான் நமக்குதவி' என்ற அன்புராசாவின் செயற்திட்டத்தை நம்பிக் கையோடு உடனடியாக நடைமுறைப் படுத்திப் பயணித்தால்தான் வரும் நாட்களைப் பசியில்லாமல் கடக்கமுடியும்.

*(அமல், யாழ்ப்பாணம்)*

**கேள்வி: பதவிகளையே கைப்பற்ற வேண்டும் எனக் குறிவைத்து வாழ்பவர்கள் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?**

பதில்: அப்படிப்பட்டவர்கள் குரங்கின் வாரிசுகளாகத்தான் இருக்கமுடியும் அமல்! ஏனெனில், ஒன்றிலிருந்து ஒன்றுக்குத் தாவித் தாவித் திரியும் குணயியல்பு குரங்குகளுக்குத்தான் அதிகம் இருக்கின்றது! இவற்றின் வாரிசுகள் எங்கும், எல்லா நிலைகளிலும் இருக்கின்றார்கள்!

*(சசி, யாழ்ப்பாணம்)*

**கே: உரையாடல், தொடர்பாடல் இல்லாமல்தானே குடும்பத்தில் பல பிரச்சினைகள் உருவாகின்றன. குறிப்பாக, கணவன் மனைவி இருவர் இடத்திலும் இத்தொடர்பாடல் இன்மையால் தான் குடும்பத்தில் தேவையில்லாத சிக்கல்கள் ஏற்படுகின்றன என்று பலரும் கூறுகின்றார்கள். இதுபற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?**

பதில்: சசி, உங்கள் அவதானிப்புச் சரி! கணவன் மனைவிக்கிடையில் தொடர்பாடல் சரியாக இருப்பின் நிறையப் பிரச்சினைகளையும் சவால்களையும் வென்று வாழலாம் என்பதில் இருகருத்துக்கு இடமில்லை! நிற்க, அண்மையில் அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றைப் பற்றியும் நீங்கள் அறிந்திருப்பது நல்லது! மனைவியுடன் அதிகமாகப் கதைப்பது மனிதனின் இதயத்திற்கு நல்லது என்று அவ்வாய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மனைவியுடன் கதைப்பதால் 80 வீதம் பேருக்கு மன உளைச்சல் குறைவதாகவும் 90வீதம் பேருக்கு மாரடைப்பு ஏற்பட வாய்ப்புக்கள் குறைவதனால் அவர்களின் ஆயுள்காலம் அதிகரிப்பதாகவும் அந்த ஆய்வில் மேலும் கண்டறியப்பட்டுள்ளது. எனினும், இதிலுள்ள பெரிய சிக்கல் என்னவென்றால், அவ்வாய்வின் முடிவில் 'யாருடைய மனைவியுடன் கதைப்பதால் மேற்சொல்லப்பட்ட பெறுபேறுகள் பெறப்பட்டன!' என்பது தெளிவுபடுத்தப்படவில்லை என்றும் சொல்லப்படுகின்றது!

*(யோசப், யாழ்ப்பாணம்)*

**கே: அவன், அசைகின்றானும் இல்லை! அனுப்புகின்றார்களும் இல்லை! என்ன நடக்குமோ?**

பதில்: யோசப், அவன் என்றால் எவன் என்று நீங்கள் துல்லியமாகச் சொல்லவில்லை! இருப்பினும், நீங்கள் குறிப்பிடும் 'அவன்'எவனாகவும் இருக்காது அவனாகத்தான் இருக்கும் என இவன் கருதுவதால் பதிலுக்கு வருகின்றேன்! யோசப், வேலியில் போகிற ஓணானை வேட்டிக்குள் பிடித்துவிட்டால் நிலைமை எப்படி இருக்குமோ அப்படித்தான் நமது நாட்டின் தலைமை இருக்கின்றது. இப்போது, ஓணான் உள்ளே ஓடித்திரிகின்றது! வேட்டியைவிட்டு வெளியே போனால் மிஞ்சியதாவது தப்பும், இல்லையென்றால் அரோகராதான்!

*(றோஸ், மன்னார்)*

**கே: பசி, பட்டினி ஏற்படுவதைத் தடுக்க எப்படி உதவலாம்?**

ப: றோஸ், மிகவும் வேதனையான விடயம் என்னவென்றால் எல்லாரும் ஏட்டுச் சுரைக்காயில் கறிசமைக்கப் பார்க்கின்றார்கள்! ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது என்பது இன்னும் பலருடைய மண்டைகளில் ஏறவில்லை! இப்போது செய்ய வேண்டியது எல்லாம் முடியுமான அளவில் மிகவும் தேவையான வீட்டுத்தோட்டம், தானியச் செய்கை, கால்நடை வளர்ப்பு, கோழிவளர்ப்பு, சிறுசிறு தொழில் முயற்சிகள் போன்றவற்றை முன்னெடுப்பதோடு தேவையில்லாத பயணங்கள், களியாட்டங்கள் போன்றவற்றைக் குறைத்தல், மேலும் உள்ளவர்கள் இல்லாதவர்களோடு பகிர்தல், பதுக்கலைத் தவிர்த்து பகிர்வதனூடாகவும் பசி பட்டினி ஏற்படுவதைத் தடுக்க உதவலாம்.

*(கலா, யாழ்ப்பாணம்)*

**கே: என் கேள்விக்கென்ன பதில் என்ற இத்தொடரை பெரியவர்கள் தொடக்கம் சிறியவர்கள் வரை எல்லாரும் நன்றாக விரும்பிப் படிக்கின்றார்கள். அதற்கான காரணம் என்ன என்று கூறமுடியுமா?**

பதில்: கலா, மிக நீண்ட காலமாக அந்த இரகசியத்தைத்தான் நானும் அறிய ஆவலாயிருக்கின்றேன். ஒருக்கால் கேட்டு, எனக்கும் சொல்லுவிங்களோ!

(நிசா, யாழ்ப்பாணம்)

**கே: எரிபொருளுக்குத் தட்டுப்பாடு என்பதோடு விலையதிகம் என்பதால் போக்குவரத்துச் செலவு அதிகம். அதனால், பாடசாலைகளைக் கொஞ்ச நாட்களுக்கு மூடிவிடலாம் என முடிவெடுக்கப் பார்க்கின்றார்கள். இவ்வாறு செய்வது சரியா?**


பதில்: நிசா, பட்டிகள் இல்லாது, தங்கள் பாட்டில், காடுகளில் வளரும் கால்நடைக்குக் கட்டாக்காலிகள் என்ற பெயருண்டு. அதுபோல, பாடசாலை செல்லாது, தங்கள் பாட்டில், றோட்டுகளில் வளரும் பிள்ளைகளுக்கு காவாலிகள் என்ற பெயருண்டு! பட்டிகள் போன்றவைதான் பாடசாலைகள். ஆக, பட்டியின்றி வளர்க்கப்பட்டால் கட்டாக்காலிகளாகத்தான் வளருகின்ற தலைமுறை மாறும்! (தொடர்ச்சி 11ம் பக்)

---

**அர்த்தமுள்ள ஆன்மீகம்**

# நற்கருணை ஆன்மீகம்

**அருட்பணி மா.ரேஜிஸ் இராசநாயகம்**



ஆன்மீகம் மானிட வாழ்வுக்கு இன்றியமையாதது. விலங்குகளிடமிருந்து மனிதரை வேறுபடுத்தியும் உயர்த்தியும் காட்டுவது அதுவே. ஆன்மீகம்தான் சாதாரண ஆட்களைச் சான்றோர்கள் ஆக்குகிறது. சராசரி மனிதர்களைப் புனிதர்களாக வளர்க்கிறது.

மனிதர் உண்மை மனிதராக, முழு மனிதராக வாழும் முறையையே ஆன்மீகம் என்கிறோம். அதாவது, உடல், உள்ளம், ஆவி எனும் மனித இயல்பின் அனைத்துப் பரிமாணங்களிலும் ஆழுமை, உறவுகள், சமூகம் எனும் அனைத்துத் துறைகளிலும் மனிதர் ஒருங்கிணைந்து வளருவதே ஆன்மீகம்.

இத்தகைய உண்மையான உயர்ந்த வாழ்வுக்கு முன்மாதிரியும் முழு மனித வளர்ச்சிக்கு உன்னத எடுத்துக்காட்டும் இயேசுக்கிறிஸ்துவே எனக் கொள்வதே கிறிஸ்தவம். அந்த இயேசுக் கிறிஸ்துவைப் பின்பற்றி வாழும் உண்மைச் சீடத்துவமே கிறிஸ்தவ ஆன்மீகம்.

இயேசுவின் உடனிருப்பின், உறவின் அருளடையாளம் நற்கருணை. அதில் அவர் தம் முழுமையான ஆள் தன்மை யுடன் நம்முடன் இருக்கிறார் நம்மோடு உரையாடுகிறார் தம் இலட்சியத்தையும் விழுமியங்களையும் நமக்குத் தந்து தம் சீடர்களாக இறை ஆட்சி ஈடுபாட்டில் முழு மனித வளர்ச்சி காண அவர் நம்மை அழைக்கிறார் அதற்குத் தேவையான அருளாற்றலையும் அவர் நமக்குத் தருகிறார். எனவே கிறிஸ்தவ ஆன்மீகம் என்பது நற்கருணை ஆன்மீகமே.

நற்கருணை ஆன்மீகம் மூன்று முக்கிய கூறுகளைக் கொண்டது. அவை கிறிஸ்து அனுபவம், ஆழுமை மாற்றம், சமூக ஈடுபாடு என்பன ஆகும்.

நற்கருணை ஆன்மீகத்திற்கு அடிப்படையானது நற்கருணை வழியாக நாம் இன்றும் நம்மோடு உடனிருக்கும் இயேசுக்கிறிஸ்துவின் அனுபவத்தைப் பெறுவது. அதாவது நற்கருணையில் நாம் அவரைச் சந்திக்கவேண்டும் அவர் பேசும் வாழ்வுதரும் வார்த்தைகளைக் கேட்க வேண்டும் அவரது அன்பையும் நலமாக்கும் ஆற்றலையும் நாம் உணரவேண்டும், தம் சீடர்களாக வாழ அவர் தரும் அழைப்பைச் செயற்படுத்த வேண்டும்.

நற்கருணைக் கொண்டாட்டம், நற்கருணை சார்ந்த பக்திமுயற்சிகள், நற் கருணைச் சந்திப்பு என்பவற்றின் முதலும் முக்கியமுமான நோக்கம் கிறிஸ்து அனுபவத்தை நமக்குத் தருவதே. அவற்றின் வழியாக எந்த அளவுக்கு நாம் அவரது அனுபவத்தைப் பெறுகிறோமோ அந்த அளவுக்கே அவை அர்த்தம் உள்ளவை, அவசியம் ஆனவை.

நற்கருணை அனுபவத்தின் வழியாக நாம் உயிர்த்தெழுந்தவராக நம் உடன்வாழும் இயேசுவுடன் ஒன்றுபடுகிறோம். இதனால் “நானே திராட்சைக் கொடி, நீங்கள் அதன் கிளைகள்” (யோவான் 15:5) என அவருடன் நாம் ஓர் உயிர் ஆகி றோம். இவ்வாறு, “இனி வாழ்பவன் நான் அல்ல. கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார்” (கலா 2:20) எனும் ஒன்றிப்பு கிறிஸ்து வுக்கும் நமக்கும் இடையே உருவாகிறது.

இயேசுக்கிறிஸ்துவோடு நற்கருணை வழியாக நாம் கொள்ளும் ஒன்றிப்பால் அவருடன் ஒருடல், ஒருயிர் என ஆகிறோம். அதாவது அவரை இயக்கிய அதே ஆவியானவரே நம்மையும் இயக்குகிறார். கிறிஸ்துவின் ஆவி நமக்குள் இருந்து நம்மை இயக்கும் போது படிப்படியாக நாம் கிறிஸ்து மயமாகிறோம் மறு கிறிஸ்துக்களாக மாற்றப்பெறுகிறோம்.

ஆம், சாதாரண அப்பமும் இரசமும் இயேசுக் கிறிஸ்துவின் உடலாக, இரத்தமாக, அவரது உடனிருப்பின் அடையாளங்களாக மாறுவதுபோல், சாதாரண மனிதர்களாகிய நாம் நற்கருணையை அருந்துவதன் வழியாக மறுகிறிஸ்துக்களாக ஆளுமை மாற்றம் பெறுகிறோம். “உங்களில் கிறிஸ்து உருவாகும்வரை உங்களுக்காக நான் மீண்டும் பேறுகால வேதனையுறுகிறேன்” (கலா 4:19) என இந்த ஆளுமை மாற்றமே தம் பணிகள் அனைத்தின் நோக்கம் எனத் தூய பவுல் குறிப்பிடுகிறார்.

நற்கருணை வழியாக மறு கிறிஸ்துக்களாக நாம் அடையும் வளர்ச்சி நமது ஆளுமையின் எல்லாப் பரிமாணங்களையும் சார்ந்தது. எனினும் அவற்றுள் முதன்மையானது நமது மனநிலையில் நாம் கிறிஸ்துவுக்கு ஒத்திருத்தல்தான். “கிறிஸ்து இயேசு கொண்டிருந்த மனநிலையே உங்களிலும் இருக்கட்டும்” (பிலி 2:5) என தூய பவுல் சுட்டிக் காட்டுகிறார். அதாவது, இயேசுவின் உள்ளம்,உணர்வுகள், எண்ணங்கள், கண்ணோக்குகள், விழுமியங்கள், முதன்மைகள், இலட்சியங்கள் நமதாகவேண்டும். அதாவது, இயேசுவில் வெளிப்பட்ட இறை அன்பை ஆழமாக அனுபவித்து அந்த அன்பால் எல்லோருக்கும், சிறப்பாக ஏழை எளியவருக்கும், சகோதரத்துவப் பணி செய்து அவரின் சாட்சிகளாக, நடமாடும் நற்கருணைகளாக வாழ்வதே நற்கருணை ஆன்மீகத்தின் இரண்டாவது முக்கிய கூறு.

நற்கருணை ஆன்மீகத்தின் மூன்றாவது முக்கிய கூறு சமூகமாற்றச் செயல்பாடு. அதாவது, நற்கருணை அருந்தி இயேசுவைப் போன்றும் மறுகிறிஸ்தவர்களாகவும் மாறியவர்கள் அவரது இறை ஆட்சி இலட்சியத்தைத் தமதாக்கிக்கொண்டு அதற்காக அவரைப் போலவும் அவருடன் இணைந்து தம்மையே அர்ப்பணிப்பது இன்றியமையாதது. நற்கருணைப்பலி, பக்திமுயற்சிகள் என்பவற்றின் மிக முக்கியமான நோக்கம் இயேசுவைப் போல் நம்மை இறை ஆட்சியின் பணியாளர்கள் ஆக்குவதே. நம் நற்கருணைப் பக்திகளும் கொண்டாட்டங்களும் எந்த அளவுக்கு நம் குடும்பங்களையும் பணித்தளங்களையும் ஊர்களையும் உலகையுமே இறைஆட்சியாக மாற்றும் சீடத்துவச் செயற்பாட்டில் நம்மை ஈடுபடுத்துகின்றனவோ அந்த அளவுக்கே அவை உண்மையானவை.

எனவே நாம் வாழும் உலகையும் சமூகத்தையும் மறந்து இயேசுவைத் துதித்துத் தோத்தரித்து ஆராதித்து அன்பு செய்யவும் பக்திப் பரவசத்தில் மூழ்கிவிடுவது அல்ல முழுமையான நற்கருணை ஆன்மீகம். (தொடர்ச்சி 11ம் பக்)

## விண்ணக வாழ்வின் 20வது ஆண்டு நிறைவு
## மரியம்மா பத்திநாதர்
**27.06.2002 – 27.06.2022**



## ஞா. பத்திநாதர்
## மரியம்மா பத்திநாதர்
### அருட்சகோதரி புளோரினா (HC)

அன்பான இறைவா!

எமது குடும்பத்தின் பாசமுள்ள அன்னையாக ஆன்மீக வழிகாட்டியாக நீர் எமக்குத் தந்த எமது அன்னைக்காக உமக்கு நன்றி கூறுகின்றோம். எமது அன்புத் தந்தையும் பாசமுள்ள அன்னையும், நேசமான சகோதரியும் உமது பிரசன்னத்தில் நித்தியத்துக்கும் மகிழ்ந்திருக்க அருள்புரிவீராக ஆமென்.

அருட்திரு
ப.யோ.ஜெபரட்ணம் அடிகளாரும்
மற்றும் குடும்ப உறவுகளும்

அலுக்கை,
அளவெட்டி

# கேள்விக்கென்ன பதில்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகவே, கல்வியில் கைவைத்தால் கட்டாக்காலிகள் அதிகமாய் உருவாவதைத் தவிர்க்க முடியாது! நாட்டினை நேசிப்பவர்களுக்கும், கல்விப் பணியில் ஈடுபடுகின்றவர்களுக்கும் சமர்ப்பணம்!

*(அருள், யாழ்ப்பாணம்)*

**கே: வாழ்க்கையில் அதை அடையவேண்டும் இதைப் பெறவேண்டும் என்று துடியாய்த் துடிப்பவர்கள் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?**

**ப:** அருள், இலக்குகள் அமைத்து வாழ்வது சிறப்பானது. அதனைத்தான் இலட்சிய வாழ்க்கை என்று சொல்கின்றார்கள். ஆனால், தங்கள் புகழுக்காக, சுய விளம்பரத்திற்காக, அதிகார ஆசையில் அதை அடையவேண்டும், இதைப் பெறவேண்டும் என்று வாழ்வின் பொருளை இழந்துபோனால், வாழ்வின் நிறைவைக் காணமுடியாது. வாழ்க்கை என்றால் என்ன என்று கேட்டதற்கு ஓர் ஆங்கில ஆசிரியர் கூறிய பதில், உங்கள் கேள்விக்கு மேலும் பொருள் சேர்க்கின்றது: 'ஒன்று மாற்றி ஒன்றைப் பிடிக்க முயன்று, இறுதியில் ஒன்றையும் பிடிக்காமல் சாவதற்குப் பெயரே வாழ்க்கை!'

# நற்கருணை ஆன்மீகம்...

(6ம் பக்கத் தொடர்ச்சி...)

மாறாக, நற்கருணைகளாக நாமும் மாறி இந்த உலகையே இயேசுவின் அன்பும் அருளும் நிறைவாழ்வும் பொங்கிப்பெருகும் நற்கருணையாக மாற்றுவதே அது.

இயேசுவும் இதனை உறுதிபட உரைத்துள்ளார். "என்னை நோக்கி, 'ஆண்டவரே, ஆண்டவரே' எனச் சொல்பவரெல்லாம் விண்ணரசுக்குள் செல்வதில்லை. மாறாக,விண்ணுலகில் உள்ள என் தந்தையின் திருவுளத்தின்படி செயற்படுபவரே செல்வர்" (மத் 7:21).

இத்தகைய நற்கருணை ஆன்மீகம் நாம் வாழும் சமூகத்திலும் உலகிலும் உள்ள ஆதிக்கங்கள், அநீதிகளை எதிர்க்கும் பண்பாட்டு, பல் சமய நல்லுறவுச் சீர்குலைவுகள், சுற்றுச்சூழல் சீரழிவுகள் என்பவற்றைத் தடுக்கும், ஆணாதிக்க முதலாளித்துவ ஆதிக்கங்களை வேரறுக்கும் சமத்துவ சகோதரத்துவ நல்லுறவுகளை வளர்க்கும். இவ்வாறு, அன்பின், நீதியின் அடிப்படையில் குடும்பத்திலும் சமூகத்திலும் உலகத்திலும் ஒப்புரவையும் ஒன்றிப்பையும் அமைதியையும் வளர்ப்பது நற்கருணை வாழ்வின் இன்றியமையாத செயற்பாடு.

நற்கருணையில் அப்பமும் இரசமும் இயேசுவின் உடலாகவும் இரத்தமாகவும் மாறுவது போல் நற்கருணையை அருந்துவோரும் அன்பு, உண்மை, நீதி, பரிவிரக்கம், சகோதரத்துவப் பணி என்பவற்றால் கிறிஸ்துமயமாக வேண்டும் இந்த அகிலத்தையே கிறிஸ்துமயமாக்க வேண்டும். மனிதத்தில் மறைந்திருக்கும் தெய்வீகம் வெளிப்படவேண்டும் இந்த மண்ணில் புதைந்திருக்கும் விண்ணகம் மலர்ந்திடவேண்டும் இந்த அகிலமே ஒரு பெரும் நற்கருணையாக மாறிடவேண்டும்.

**கத்தோலிக்க அச்சகத்தில் விற்பனைக்கு**

- மோட்சபாதை
- செபப் புத்தகங்கள்
- மெழுகுவர்த்திகள்
- முதல்நன்மைச் சான்றிதழ்கள்
- திருச் செபமாலைகள்
- திருப்பலிப் பொருட்கள்
- பரிசுப் பொருட்கள்

என்பவற்றை மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

## விண்ணகப் பிறப்பில் 3ம் ஆண்டு



அமரர்
## திருமதி மரியா மின்னொளி ஜீலியன்
### (லூர்த்துமலர்)

14.06.2022 அன்று எமது குடும்பத்தலைவியின் பிறந்ததினம், விண்ணகப்பிறப்பின் 03வது ஆண்டு நிறைவில் அன்போடு உன்னை நினைவு கூருகின்றோம். இம் மகிழ்வான நாள் இன்று எம்மோடு நீ இல்லையென்றாலும் எம் உள்ளத்தில் என்றும் வாழ்கின்றாய். இறைவனோடு இணைந்திருந்து மகிழ்ந்திருக்க வேண்டுகின்றோம்.

819, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்
021 222 9752
077 749 8865

அன்புக் கணவர்,
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

AD- 50

## 31ம் நாள் நினைவு

தோற்றம்
08 . 01 . 1963



மறைவு
30 . 05 . 2022

அமரர்
## பெஞ்சமின் சாம்சன் கனீசியஸ்

"ஆண்டவரின் இல்லத்தில் என் வாழ்நாள் எல்லாம் நான் குடியிருக்க வேண்டும்"

அன்பும் இரக்கமும் நிறைந்த இறைவா!

நீர் உம்மிடம் அழைத்துக்கொண்ட அமரர் பெஞ்சமின் சாம்சன் கனீசியஸ் எனும் உமது மகனுக்காக உம்மைப் போற்றுகின்றோம். இவரின் வாழ்வுக்காக நன்றி கூறுவதோடு இவரின் பாவங்களை மன்னித்து நிலைவாழ்வைக் கொடுத்து புனிதர்களின் உறவிலே என்றும் மகிழ்ந்திருக்க அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம். ஆமென்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 29.06.2022 புதன்கிழமை காலை 5.30 மணிக்கு யாழ் புனித மரியன்னை பேராலயத்திலும் காலை 6.00 மணிக்கு அருள் ஆச்சிரமத்திலும் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

96, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்

தகவல் குடும்பத்தினர்.

AD- 51

## பங்குப் பீடப்பணியாளர்களுக்கிடையில் உதைப்பந்தாட்டப்போட்டி



முழங்காவிலில் இரணைமாதாநகர் பீடப் பணியாளர்களுக்கும், குமுழமுனை பங்குப் பீடப் பணியாளர்களுக்கும் இடையில் உறவை வளர்க்கும் நோக்குடன் உதைப்பந்தாட்டப் போட்டி இடம்பெற்றது. இரு பங்குகளின் தந்தையர்களாகிய அருட்பணியாளர்கள் ம.பத்திநாதர் அடிகள், நிதர்சன் அடிகளார் ஆகியோர் இணைந்து ஒழுங்கு செய்திருந்தனர். இப்போட்டியில் குமுழமுனைப் பங்குப் பீடப்பணியாளர்கள் வெற்றி பெற்றனர்.

## நவாலி வின்சென்ட் டி போல் சபை வருடாந்தக் கூட்டம்



நவாலி புனித வின்சென்ட் டி போல் சபையின் புனித பேதுருவானவர் பந்தியின் வருடாந்தக்கூட்டம் கடந்த வாரம் புனித பேதுருவானவர் பாடசாலை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

யாழ் மறைமாவட்ட புனித வின்சென்ட் டி போல் மத்திய சபையின் ஆன்ம ஆலோசகர் அருட்திரு நேசநாயகம் அடிகள் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தார்.

## முழங்காவில் அன்னை மரியின் பெருவிழா



முழங்காவில் மாதா ஆலயத் திருவிழா கடந்த 31ம் திகதி இடம்பெற்றது. இத் திருவிழாத்திருப்பலியை அருட்தந்தை எயின்சிலி றொஷான் அடிகளார் தலைமையேற்று ஒப்புக்கொடுத்திருந்தார். திருநாள் திருப்பலியைத் தொடர்ந்து திருச்சுரூபப் பவனியும் ஆசீர்வாதமும் இடம்பெற்றது.

## உடுப்புக்குளத்தில் அன்பிய வாரம்



முல்லைத்தீவு மறைக்கோட்டத்தில் அமைந்துள்ள உடுப்புக்குளம் குழந்தை இயேசு ஆலய அன்பிய விழா கடந்த வாரம் இடம்பெற்றது.

அன்பியங்களுக்கான கொடிகள் அன்பிய ஊக்குவிப்பாளர்களால் ஏற்றப்பட்டு முல்லைத்தீவு மறைக்கோட்ட அன்பிய இயக்குநர் அருட்திரு எரோனியஸ் அடிகளின் தலைமையில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. திருப்பலி நிறைவில் அன்பிய விருந்துப் பகிர்வு இடம்பெற்றது.

## திருக்குடும்ப சபையினரால் யுவதிகளுக்கு உளவியல் உருவாக்கம்



யாழ். மாகாணத் திருக்குடும்ப துறவற சபை அருட்சகோதரிகளின் தலைமைத்துவ குழுவின் ஏற்பாட்டில் இளம் விதவைகள், மடங்களில் பணிபுரியும் யுவதிகள் மற்றும் மாணவிகளை மையப்படுத்திய அகக் குழந்தை ஆற்றுப்படுத்தல் பயிற்சிப் பட்டறை இளவாலையில் அமைந்துள்ள திருக்குடும்ப துறவற சபையினரின் நசரேத்துத் தியான இல்லத்தில் இம்மாதம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அக உணர்வுகளை வழிப் படுத்தும் குழுச் செயற்பாடுகள், தியானங்கள், குணப்படுத்தல், அனுபவப் பகிர்வுகள் என்பன இடம் பெற்றன.

## நாவற்குழியில் அன்பிய விழா



அன்பிய ஆண்டினை முன்னிட்டு "கூட்டொருங்கியக்கத்தின் ஊடாக அன்பிய வாழ்விற்கான புதுப்பித்தல்" எனும் தொனிப் பொருளில் புனித அற்புத அன்னை ஆலயப் பங்குத்தந்தை அருட்பணி. ஞா.ஞானரூபன் அடிகளாரோடு பங்குமக்கள் இணைந்து ஒழுங்குபடுத்திய தேசிய அன்பிய விழா கடந்த 12.06.2022 ஞாயிறு திருப்பலியோடு அன்பிய பகிர்வு இடம்பெற்றதோடு 25 இற்கும் மேற்பட்ட மரங்கள் நாட்டி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக அருட்பணி.றொனால்ட் அடிகளார் கலந்து திருப்பலியை சிறப்பித்தார்.

## ஞானதீபம் இளையோர் திறனாளிகள் கௌரவிப்பு



அமல மரித்தியாகிகள் சபையின் ஞானதீபம் இளையோர் திறன் விருத்தி மையத்தில் இவ்வருடத்திற்கான அழகுக்கலை, தையல், கணினி மற்றும் கீபோட் கற்கை நெறி களை நிறைவுசெய்த 35 மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த வாரம் நடைபெற்றது.

ஞானதீபம் இளையோர் திறன்விருத்திமைய இயக்குநர் அருட்திரு யூட்கரோவ் அடிகளின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் அமல மரித்தியாகிகள் சபையின் யாழ் மாகாண முதல்வர் அருட்திரு யூஜின் பெனடிற் அடிகள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார். மேலும் இந்நிலையத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற கற்கை நெறிகளுக்கான புதிய வகுப்புக்கள் யூன் மாதம் 12ஆம் திகதி ஆரம்பமாகியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## உலக சுற்றுச் சூழல் தின சிறப்பு நிகழ்வுகள்



உலகச் சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் மற்றும் வன்னி கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தினரால் முன்னெடுக்கப்பட்ட சிறப்பு நிகழ்வுகள் கடந்த 05ஆம் திகதி யாழ்ப்பாணம், வேலணை, சாட்டி மற்றும் முல்லைத்தீவு பிரதேசங்களில் நடைபெற்றன.

சுற்றுச்சூழல் தூய்மை மட்டில் நாம் அக்கறையுடன் செயற்பட வேண்டும் என்பதனை வலியுறுத்தி அதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட இந்நிகழ்வில் அங்குள்ள கடற்கரைப் பிரதேசங்கள் சுத்தம் செய்யப்பட்டுப் பயன்தரு மரங்களும் நாட்டப்பட்டன.

இந்நிகழ்வில் சர்வமதத் தலைவர்கள், இலங்கைக் காவல்துறையினர், இராணுவத்தினர், இளையோர்கள், மற்றும் கியூடெக் கரித்தாஸ் கிராம மட்டக் குழுக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

## தனிநாயகம் அடிகளார் சிலை புனரமைப்பு



நெடுந்தீவு பிரதேசத்தின் நுளைவாயிலில் அமைந்துள்ள தமிழுக்கும் கத்தோலிக்க திரு அவைக்கும் தொண்டாற்றிய தவத்திரு தமிழ்த் தூது தனிநாயகம் அடிகளின் உருவச்சிலை புனரமைப்புச் செய்யப்பட்டுக் கடந்த வாரம் திறந்து வைக்கப்பட்டது.

நெடுந்தீவுப் பங்குத்தந்தை அருட்திரு விமலசேகரன் அடிகளின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சிறப்பு வழிபாடுகளும் இடம்பெற்றன.

இவ் உருவச்சிலை ஜேர்மன் நாட்டில் உள்ள திரு இம்மானுவேல் அவர்களின் நிதிப்பங்களிப்பில் புனரமைப்புச் செய்யப் பட்டுள்ளது.

## திரு. F.X. அன்ரன் காலமானார்



யாழ். அடைக்கல அன்னை ஆலயப் பங்கைச்சேர்ந்த திரு F.X. அன்ரன் கடந்த 20.05.2022 அன்று காலமானார்.

இவர் கல்விப்பணிப்பாளராகவும், கத்தோலிக்க பாடசாலைகளில் அதிபராகவும் பணியாற்றியதுடன் யாழ். மறைமாவட்டத்தில் பொதுநிலை ஆணைக்குழுவில் சிறந்த ஆளுமைமிக்கவராக அரும்பல பணிகள் செய்துள்ளார்.

இவர் பாதுகாவலன் பத்திரிகையின் தொடர் ஆக்கங்களை எழுதி வந்த எழுத்தாளருமாவார்.

அன்னாரின் ஆன்மா இறைவனில் இளைப்பாற இறைவனை மன்றாடுவோம்.

## நெடுந்தீவில் முதல்நன்மை

தீவக மறைக்கோட்டத்திற்குட்பட்ட நெடுந்தீவுப் பங்கில் புனித அந்தோனியார் ஆலயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கான முதல் நன்மை அருட்சாதனம் வழங்கும் நிகழ்வு கடந்த வாரம் நடைபெற்றது.

பங்குத்தந்தை அருட்திரு விமலசேகரன் அடிகளின் தலைமையில் நடைபெற்ற அருட்சாதனத் திருப் பலியில் 09 சிறார்கள் முதல் நன்மை அருட்சாதனத்தைப் பெற்றுக் கொண்டார்கள்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2022ம் ஆண்டு யூன் மாதம் 26ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.